


# கவியில் உறவாடி...

அனுராதபுரம், யாழ்ப்பாணம், மன்னார் வாழ்
30 கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு

தொகுப்பாசிரியர்கள்
க.பரணீதரன்
நாச்-சியாதீவு பர்வீன்
மன்னார் அமுதன்

ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியில் உறவாடி...

அநுராதபுரம், யாழ்ப்பாணம், மன்னார்
வாழ் 30 இளம் கவிஞர்களின்
கவிதைகளின் தொகுப்பு


தொகுப்பாசிரியர்கள்
க.பரணீதரன்
நாச்சியாதீவு பர்வீன்
மன்னார் அமுதன்



ஜீவநதி வெளியீடு
கலை அகம்
அல்வாய்
2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியில் உறவாடி... ▪ கவிதைகள் ▪ தொகுப்பாசிரியர்கள்: க.பரணீதரன் & நாச்சியாதீவு பர்வீன் & மன்னார் அமுதன் ▪ © க.பரணீதரன் ▪ முதல்பதிப்பு: ஒக்டோபர் 2011▪ வெளியீடு: ஜீவநதி கலைஅகம், அல்வாய் ▪ தொலைபேசி:0775991949▪ மின்னஞ்சல்: jeevanathy@yahoo.com▪ அச்சுக்கோப்பு: மதிகலர்ஸ், நல்லூர் அட்டை வடிவமைப்பு: க.பரணீதரன்▪ பக்கங்கள்: 96 விலை: 200/=▪

ஜீவநதி வெளியீடு:11

**Kaviyil uravadi▪** Poems .co-Authors: K.Bharaneethran & Najijatheevu Farveen & Mannar Amuthan▪ © K.Bharaneetharan▪ Language: Tamil▪ First Edition: October 2011▪ Published by Jeevanathy, Kalaiaham, Alvai▪ Phone: 0775991949▪ E-mail: jeevanathy@yahoo.com▪ Printed at Mathy colours, Nallur▪ Cover designed by K.Bharaneetharan▪ Pages: 96▪ Price: 200/=▪

ISBN: 978-955-52496-3-8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஈழத்து மூத்த கவிஞர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியில் உறவாடியவர்கள்

- பதிப்புரை
- அணிந்துரை
- கெகிறாவ ஸஹானா
- கெகிறாவ ஸுலைஹா
- நாச்சியாதீவு பர்வீன்
- ரிஸ்னா ரசீன்
- நாச்சியாதீவு எம்.சஹிரின் அஹ்மத்
- நேகம பஸான்
- எல். வஸீம் அக்ரம்
- நிசாம் பாரூக்
- ஜன்சி கபூர்
- மிப்ராஸ் இஸ்மாயில்
- இ.இராஜேஸ்கண்ணன்
- த.ஜெயசீலன்
- தாட்சாயணி
- பெரிய ஐங்கரன்
- செல்லக்குட்டி கணேசன்
- வெ.துஷ்யந்தன்
- த.அஜந்தகுமார்
- புலோலியூர் வேல் நந்தன்
- க.பரணீதரன்
- கமலசுதர்சன்
- மன்னார் எம். ஷிபான்
- பி.அமல்ராஜ்
- செல்வி.ரமாப்பிரியா கருணைராசா
- மன்னார் அமுதன்
- அமல்ராஜ் ரெவல்
- மன்னூரான் ஷிஹார்
- செல்வி. மொகமட் சுஜானா
- ஜே.ஆர்.மயூரன்
- பஸ்டினா ரமேஷ்
- பி.பெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் பதிப்பு முயற்சியில் பதினோராவது வெளியீடாக வெளிவருவது 'கவியில் உறவாடி...' எனும் இக்கவிதைத்தொகுப்பு நூலாகும். ஏற்கனவே, ஜீவநதியில் வெளிவந்த அறுபது கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து 'நதியில் விளையாடி...' என்ற பெயரில் வெளியீடு செய்திருந்தோம். அந்நூல் வாசகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இன்று, சற்று வித்தியாசமாக, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் வாழும் முப்பது இளம் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து 'கவியில் உறவாடி...' என்ற கவிதை நூலாகத் தருகின்றோம். இந்த இளம் கவிஞர்கள் இன்று இலக்கிய உலகில் நன்கு அறியப்படுபவர்கள். இத்தொகுப்பு நூலில் இணைவதன் மூலம் 'கவியில் உறவாடி' கவிதை இலக்கியத்துக்கு வளம் சேர்க்கிறார்கள்.

இந்நூல் தொகுப்பாசிரியர்களாக நாச்சியாதீவு பர்வீன், மன்னார் அமுதன் ஆகிய இருவரும் என்னோடு இணைந்திருக்கிறார்கள். உண்மையில், இவ்வாறானதொரு கவிதைத் தொகுப்பு நூலைக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் ஏக காலத்தில் எம் மூவரிடமும் கருக்கொண்டமை ஆச்சரியத்துக்குரியதாகும். இந்த எண்ணத்தை நாம் எம்மிடையே பகிர்ந்து கொண்டு, உடனடியாகவே செயற்படத் தொடங்கினோம். எம் ஒவ்வொருவருடனும் எங்கள் பிரதேசத்தைச் சேர்ந்த கவிஞர்களும் ஒத்துழைத்தனர். அதன் காரணமாக இந்நூலை விரைவாக வெளியீடு செய்ய முடிந்துள்ளது. ஜீவநதி வெளியீடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் வாசகர்கள் இந்நூலையும் வரவேற்பார்கள் என்று நம்புகின்றோம்.

**க.பரணீதரன்**
**2011.10.26**

**கலை அகம்**
**அல்வாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைத் தமிழ்நாட்டாரும் கண்டு வியந்து பாராட்டும் நிலையை உருவாக்கிய பெருமை, சிறப்பு போர்க்காலக் கவிதைகளுக்கே உண்டு. இன்று போர் முடிவுற்று இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னர் மூன்று பிரதேசங்களைச் சேர்ந்த முப்பது இளம் கவிஞர்களின் அறுபது கவிதைகளின் தொகுப்பாக இந்தநூல் வெளிவருகின்றது. போரின்பின்னர் ஈழத்துக் கவிதை வீச்சில் ஒருதளர்ச்சி நிலை காணப் படுகின்றபோதும், அந்தக் கொடிய போரினால் உண்டான வடு, இரணம் இன்னும் ஆறவில்லை என்பதனையே இந்தத் தொகுதியிலுள்ள பெரும்பாலான கவிதைகள் உயிர்ப்புடன் வெளிப்படுத்துகின்றன. உதிரத்தை உறைய வைக்கும் சில கவிதை வரிகள், "குற்றுயிராய்க் / கிடந்த உடலேறிச் / சுகம் கண்ட காடையரின் / பண்டாட்டைப் பார்த்து ....." என உயிர்க் குலையைத் திருகிப் பிடுங்குகின்றது.

இளம் பெண்களின் கைம்மை என்பது மிகக் கொடிய சோகம் இதுவொரு சமூகக் கொடுமை என்பதை, "வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள் / மணவாளன் இறந்தாற்பின் மணத்தல் தீதோ / பாடாத தேனீக்கள் உலவாத்தென்றல் / பசிக்காத நல்வயிறு பார்த்த துண்டோ என அனுதாபத்து டன் சமூக சீர்திருத்தக் கருத்தினைப் பாரதிதாசன் பாடுகின்றார். ஆனால் நடந்து முடிந்தபோரினால் கணவன்மாரை இழந்து தவிக்கும் பல ஆயிரக் கணக்கான விதவைப் பெண்களுக்கு, "வாழ்வு கொடுப்போம் வாருங்கள்" எனக் கூவி அழைக்கும் முற்போக்கான குரல் இந்தத் தொகுதிக்குள் இருந்து எழுகின்றது. பெண்ணியம் பற்றி வீச்சான கவிதைகளைப் பெண் கவிஞர்கள் எழுதிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், ஆண்கவிஞர்களும் இங்கு எழுதி இருப்பது வரவேற்கத்தகுந்த ஓர் அம்சம்.

இளம் கவிஞர்களின் கவிதைத்தொகுதியாக இருப்பதனால் காதல் கவிதைகள் பரிமளிக்குமென எதிர்பார்ப்பது மிக நியாயம். ஆனால் கடந்த கால மனித சங்காரத்தையே கொதிப்புடன் கவிதைகளாகப்பாடும் இளம் உள்ளங்கள், இளமையின் இனிய கீதமாக மென்மையான காதல் உணர்வைப் பதிவு செய்யாமல் விட்டு விடவில்லை.

பல கவிதைகளில் இராக்காலம் சித்திரிக்கப்படுகின்றது. இருள் கொடியது. அச்சம், பயங்கரம் மிகுந்தது. தனிமையில் துன்பமுறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு உயிரச்சமூட்டும் குரூரமான காலம். அதனாற் போலும் இராக்காலம் திரைவிரித்துக் கிடக்கிறது.

மனிதனிடம் இருக்கும் கலையுணர்வும், மனித நேயமும் இன, மத, பேதம் கடந்தது. அது யாரிடத்தில் இருக்குமென எளிதில் கண்டுகொள்ள இயலாது. ஓர் இராணுவ வீரனை இந்தத்தொகுதியிலுள்ள கவிஞர் ஒருவர் எங்கள் கண்களின் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார். "ஒரு பட்டாம் பூச்சியைக் கூட / பார்த்து ரசிப்பேனேயன்றி / தொட்டுப் பார்க்கத் துணிந்த தில்லை நான் / தேகம் வலிக்குமேயென்று / ..... என்னால் யாரையும் / கொல்ல முடியாது / என்னைத் தவிர / .... பெற்ற மகனை / யுத்தத்தில் இழந்ததற்காய் / உனக்கு மேதும் பெரிதாக / இழப்பீடு கிடைக்கலாம் தாயே" இந்தக் கவிதை வரிகள் உள்ளத்தில் சிலிர்ப்பையும், அதேசமயம் கண்ணீரையும் வருவிக்கின்றன அல்லவா!

ஒருசில கவிதைகளை என் போன்றவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டுமானால்,அந்தக் கவிதைகளை எழுதி இருக்கும் கவிஞர்களிடம் கேட்டறிந்து கொள்ள வேண்டுமென்பதனை ஒளிமறைவில்லாது இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

ஒரு விவசாயின் தோட்டத்துப் பயிர்கள் அனைத்தும் சமமான வளர்ச்சி பெறுவதில்லை. சில செழித்து, சில நடுத்தரமாக, சில சின்னஞ் சிறுசாக வளர்ந்து நிற்கும். இந்த வேறுபாடுகளுக்குக் காரணமாக இருப்பது ஊன்றிய விதைகளின் வீரியம். இத்தகைய தோற்றத்தினையே இந்தத் தொகுதிநூல் எனக்கு தருகின்றது. கவித்துவம் மிக்க கவிதைகள் இத் தொகுப்பினில் இடம்பெற்றபோதிலும், இங்குள்ள கவிதை ஒன்றினை இன்றைய கவிஞர் அனைவரும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். "கவிதைகள் மீது கருணையினைக் காட்டுங்கள் / ... கும்பிட்டுக் கேட்கின்றேன் ... கவிதைகள் இன்று தமது முகமிழந்து ...." என்ற நெஞ்சம் பொருமி மன்றாட்டமாக கும்பிட்டு இலக்கிய அக்கறையுடன் வேண்டுகோள் விடுகின்றார். ஏன் இந்த மன்றாட்டம் இதற்கான விடையை நீங்களே கண்டு கொள்ளுங்கள்!

"ஜீவநதி" இன் பதினோராவது வெளியீடு இந்தத் தொகுப்பு. ஜீவநதி பிரதம ஆசிரியர் க.பரணீதரன், கவிஞர்களான நாச்சியாதீவு பர்வீன், மன்னார் அமுதன் ஆகிய மூவரும் தொகுத்தளித்திருக்கும் இந்தக் "கவியில் உறவாடி..." மகிழ்வதற்கு உங்களை அழைக்கின்றார்கள் அழைப்பினை ஏற்று மகிழுங்கள்!

**தெணியான்**

2011.10.23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெகிறாவ ஸஹறானா

# விலாசம்

ஒவ்வொரு முகத்திலும்
ஒரு விலாசம் தெரிகிறது.
சிலது ஒளிமயமாய் இருக்கிறது;
சிலது இருள்மயமாய்;
சிலது ஒளியும் இருளும் கலந்து;
சில இருளும் ஒளியும் கலந்த வண்ணம் காட்டி;
இருள் கூடி ஒளி கலந்து,
ஒளி கூடி இருள் கலந்து.

சில எம்மை சரியான இடத்திற்கு
இட்டுச் செல்கின்றன.
சில இடை நடுவில் விட்டுச் செல்ல,
சில வழிதவற வைக்கின்றன.

எப்படியிருப்பினும்,
ஒளியின் வடிவம் பூசி,
இருளின் அந்தகாரத்தில் அடைந்த
உனது விலாசத்தை
ஏனோ மறக்க முடியவில்லை.
பார்வையில் சுட்டெரிக்கின்ற
பொறாமை நெருப்புகளுக்கும் மேலே
நீ பனி தடவிய பாதை காட்ட,
சிலிர்த்துப் பயணித்த நாம்
இடையில் இருட்சகதியில் வீழ்ந்தோம்.

ஏனோ உனது
முகத்தின் ஒளிவிலாசம்
இன்னும்
கண்ணில் நிறைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிக்குஞ்சு வளர்க்கும் மகளே!

குஞ்சைத் தூக்கிக் கொஞ்சிச் சுமந்து
திரிகிறாய்;
விளையாட்டு வார்த்தைகள் பேசுகிறாய்;
துள்ளிக் குதித்து
விளையாடுகிறாய்;
இரவில் பாதுகாப்பாக
உறங்கவைப்பதற்காக
கட்டில் அருகே வைத்துக்கொள்கிறாய்;
பூனை, காகம் பிடித்திடுமே என்று
பயப்படுகிறாய்.
இதே பயம்தான்
உன்னை நெஞ்சில்
சுமப்பதன்போதும்
என்பதை எப்படிச் சொல்வேன் மகளே!
சுற்றி ஓநாய்களும், நரிகளும்
சூழ்ந்திருக்கும் காட்டில்
ஒரு மெல்லிய குஞ்சைத்
தூக்கிக் கொண்டு
நடப்பதன் கஷ்டம்
உனக்குப் புரிகிறதா மகளே?

நீ கற்றுத் தேர்ந்த
பண்டிதையாக வரவேண்டும்
என்ற பேராசை எனக்கில்லை.
இந்தப் பிஞ்சு உள்ளத்தில்
விஷக் கறையான்கள்
வந்து விழுந்திடா வண்ணம்
காத்து உன்னை
எப்படி வளர்ப்பது
என்பதே கேள்வியாயிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்க உணர்வுகள்
வல்லுறவு செலுத்தும் பூமியில்
நேர்மையின் ஒளி கொண்டு
நீ நடக்கும் பாதை
எவ்வளவு கரடுமுரடானது
என்பதை நான் குறித்து வைத்திருக்கிறேன்
உனது ஞாபகங்களுக்காக மகளே.

கரப்பான் பூச்சியைப்போல
ஊரும் நிகழ்காலத்தில்
உனது எதிர்காலம் பற்றிய பயம்
பல்லியாய்க் கௌவிக்கொள்ள
இறந்த காலங்களின்
இனிய நினைவுகளை மட்டுமே
சுமந்த நான்...!



ஆசிரியையாக பணிபுரியும் இவர் 1980களின் முற்பகுதியில் எழுத்துலகிற்குள் பிரவேசித்தார். சிறுகதை, கவிதை, குறுநாவல், கட்டுரை, சிறுவர் இலக்கியம் என பலதுறைகளில் எழுதி வருபவர். இவர் ஒரு கவிதைத் தொகுதியினையும், ஒரு சிறுகதைத் தொகுதியினையும் ஒரு குறுநாவலையும் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கெகிறாவ ஸுலைஹா*

# கழுத்தறுப்புகள்

கட்டில் மீதில் பொத்தென வீழ்ந்து
புத்தகம் துழாவின கண்கள்
முகத்துக்கு நேரே வட்டமிட்டுப் பறந்தது
யன்னல் வழி நுழைந்து அசிங்கமாய் ஒரு பூச்சி.
சின்னச் சின்ன கம்பிக் கூடுகளுள்
விழித்துக் கீச்சிடும் கோழிகளின்
பொட்டென ஒளிரும் செந்நிறக்கண்கள்.
வண்டி போட்டு முண்டியடித்தன
வாடிக்கையாளர் கூட்டம்.
அவசர அவசரமாய் அறுத்து வீசப்பட்டன
அடுத்தடுத்து பல கோழிகள்.
பாதி தொங்கும் கழுத்தில் சொட்டும்
குருதிக் கறையின் நாற்றத்தை
நாலாபுறமும் விசிறிற்று அரைப் பீப்பா.
இயலாமையின் இறுதிச் சிறகடிப்புகளூடே
உயிர் நாடி அடங்கிப்போக
முன்னும் பின்னுமாய்த் தத்தளித்தபடி
தொங்கிக் கிடந்தது மனசு.
இரைதேடிப் போன சமயத்தே திடுமென சூழும் ஆபத்தில்
குஞ்சுகளைப் பத்திரமாய்ப் பதுக்கிக் கொள்ளும்
தாய்மையின் சாயல் கொஞ்சமுமில்லை,
மனிதனுக்குள் மிதமாயிருக்கும் மிருகவெறியில்.
வெள்ளைக் கொடியசைத்தும்
கருணையின் கதவுகள் திறக்கப்படாத் துயரில்
மேனியெங்கிலும் காந்தல் பரவிற்று.
சிறகிலிருந்து பிரிந்து வந்த கோழியிறகு
காலடியில் வீழ்ந்து சேதி சொல்லிப் போயிற்று.
எத்தனை பெரிய அவஸ்தை
கோழிக் கடைக்குப் பக்கத்து வீடனாய்
இருத்தல் என்பது...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் 'இரண்டாம் ஜாமங்களின் கதை'

இருட்டுத் தேங்கிய
வீட்டு மூலைகள்
கோடிக் கதைகள் சுமந்தன.
கதவென்னவோ சாத்தித்தான் கிடந்தது.
தீச்சுடராய் கனன்ற எண்ணங்களை
அடக்கி வைக்கும்
பிரயத்தனங்கள் மட்டும்
தோற்றே போயின.
மனநாகம் ஊர்ந்து ஊர்ந்து போயிற்று
நிச்சலனமாய் விரிந்த
கனவுகளின் தோட்டத்தே.
நுரை கொந்தளிக்கும் அருவியாய்
உடல் தவித்துக் கிடக்க, மனசெங்கும்
மஞ்சள் பொன் வண்டுகளின்
சிறகடிப்புக்கள்.
கிஞ்சித்தும் நேயம் சொல்லா
உன் காட்டுத்தன அரவணைப்பில்
கணப் போதில் கனவழிய
இராட்சத விரல் சுண்டிய புழுவாய்
ஒரே நொடியில் முற்றாய்த் தனித்தேன் நான்.
பயணம் முடிந்து போயிற்று
எதையும் பார்க்காததுபோல ஏக்கங்களின்
மீதங்கள் இன்னும் நீண்டு கிடந்தன
மனவெளியில்..

பொழுது புலர்ந்தது வழமை போல.
என் தீரா வாஞ்சையைப் புறந்தள்ளி,
கதவு திறக்கப்பட்டது பேராசையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்குப் பானைகளுக்குள்
இரவின் கதைகள் ஒளிந்து
இடுப்புச் சுமந்த குழந்தையோடு
சுழன்றடிப்பேன்.
சமையலறைப் புகைக்குள்.
வேலைக்காரியின் இடுப்பில்
தட்டும் கணவன் சகித்து
'எனக்கென்ன குறை' என்று
ஒய்யாரம் பேசுவேன்
அவன் ஆண்.
நானோ உருப்போட்ட பாடத்தை
ஒப்புவிக்கும் மாணவி!



சிறந்ததொரு மொழிபெர்ப்புக் கவிஞராகத் திகழும் பெண் படைப்பாளி இவர். இவர் பல கவிதைகளை மொழிபெயர்ப்புச் செய்து வருகின்றார். 'பட்டுப் பூச்சிகளின் பின்னுகை போலும்..." என்னும் மொழிபெயர்ப்பு கவிதைகள் தொகுப்பை வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சியாதீவு பர்வீன்

# இன்னொரு நிஜம்...

துயரம் மறந்த
ஒரு அழகான மாலையில்
மீண்டும் அவளைக் கண்டேன்...

கால்களின் நடுக்கமும்
நெஞ்சின் பரபரப்பும்
கண்களில் ஏக்கமும்..
என்னையும் அறியாமல்.
மீண்டும் உருவாகின.

ஏதாவது பேச வேண்டும்
என்ற எனது...
எத்தனிப்பை
அவள் கணவனின் வருகை
தடுத்து விட்டது...

பத்தாண்டுகள்
கழிந்த பின்னும்
இன்னும் முதலாவது
சந்தித்த அதே நிலைதான்
எனக்கு..

பூமியை வெறித்துப் பார்த்துவிட்டு
யாருக்கும் தெரியாமல்
கண்ணீர்த் துளிகளை
துடைத்த வண்ணம்
வீட்டை நோக்கியதாய்
நகர்கிறேன்...காதலுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சியாதீவு பர்வீன்

# யதார்த்தத்தின் கோடுகள்

எச்சில் விழுங்கி
பத்திரப் படுத்தும்
நிஜம்பற்றிய குறிப்புகளை
என்றாவது ஒருநாள்
அவன் அறியக் கூடும்

என்பழைய டயரிக்குறிப்புகள்
அல்லது என் பாடசாலை
புத்தகங்களின் கடைசிப்பக்கம்
அல்லது வேறு ஏதாகிலும்
ஒருவகையில்..
எனதான காதலின்
நிஜத்தை அறியக்கூடும்

பிள்ளை பெற்றுக்கொள்ளவும்
அவனது ஆடைகளை
துவைக்கவும்
அடுக்களைகளில் மாடு போல
உழன்றும் ...
இன்னும் இரவுகளில்..
அவனது..ஆசைகளை..
நிறைவேற்றவும் மட்டுமே
நான்..என்ற அவனது
எடுகோள் மாறிப்போகும்
எனக்கும் இதயம்
இருக்கிறது என்ற மெய்
புலப்படும் போது..



சிரட்டையும் மண்ணும் இவரது முதலாவது கவிதை தொகுதியாகும். புதுப்புனல்,வேலிகளை தாண்டும் வேர்கள் ஆகிய கவிதை தொகுதிகளின் தொகுப்பாசிரியர்களில் ஒருவர். பேனாவால் பேசுகிறேன் இவரது பத்தி எழுத்து தொகுதியாகும். மனவெளியின் பிரதி, மூன்றாவது இதயம் ஆகிய இரண்டு கவிதை தொகுதிகளும் விரைவில் வெளிவர காத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ரிஸ்னா ரசீன்*

# என் இனிய தேவதைக்கு...

கபடமற்ற அன்பை
எல்லையற்று சொரிபவளே
உன் அன்பை
அளப்பதற்கு கருவிகள்
தேவையில்லை தாயே

அருள் தெறிக்கும்
உன் நீல நயனங்கள்
என் மீதுள்ள அன்பை
பறை சாற்றுகின்றது..

இலையுதிர் காலங்களில்
சொரியும்
இலைகளைப் போலல்ல
உன் அன்பு..

அத்தனை சக்தியும்
உன் அன்பின் முன்னாள்
ஒன்றும் இல்லை என்றாகிவிடும்

பாரினிலே அன்பிற்கு
உருவம் தந்தவளே..
என் இதய தேவதையே..

உன் அன்பெனும்
சுவாசக் காற்றையே
என் சுவாசப் பை
சுமக்கிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ரிஸ்னா ரசீன்*

# மண்வாசனை...

கள்ளிச் செடிகள்
காணப்பட்ட சாலையில்
கற்பூர வாசனை

குண்டுகள் முளைத்த
இடங்கள் தோறும்
பச்சைத் தாவரங்கள்

இரத்த வாடையை
விழுங்கிய திருப்தியில்
மகிழ்ச்சியின் அலை

இத்தனையும்
நான் பிறந்த மண்ணில்
இன்று ...

சொந்த மண்ணின்
வாசனை
என் கல்லறையிலும்
நாளை வீசும் ..



இக்கிரிகொல்லாவையைப் பிறப்பிடமாக கொண்ட இவர் வளர்ந்து வரும் இளம் கவிஞர், இலகு மொழியில் நல்ல பல கவிதைகளை எழுதியுள்ள இவரின் பல கவிதைகள் தேசிய நாளேடுகளில் வெளியாகியுள்ளன. இவரது கவிதைத் தொகுதி ஒன்றும் வெளிவர காத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சியாதீவு எம்.சஹிரின் அஹ்மத்

# இன்னொரு நாள்

இன்னொரு நாள்
விடியும்..
முகாரிகள் அற்ற
ராகங்களுடன்

மெல்லிசை பாடி
வரவேற்க குயில்களோ
விடியலை புலப்படுத்தும்
சேவல்களோ..
கூவிட முடியாத
நிமிசங்கள் தான் அவை

ஒரு தொழிலாளி
சுடப்படுவான்
அவன் கைகள் இரண்டும்
பின்னால் கட்டப்பட்டிருக்கும்

சோசலிசம், வர்க்க வாதம்
வலு விழந்து
வாழ்க்கை
பயணிக்கும்
அராஜகத்தை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயங்கள்

அகதிகள் எமது
கதியோ..
இன்னும் அவகதிதான்..

சொந்த முகவரியாய்
போனது முகாம்கள்

வலுவிழந்து போன
எங்கள் தியாகங்களில்
வாய்ப்பில்லை
வாழ்க்கை மலர

ஆறாத
மனக்காயத்தின்
சுவடுகளை
வெளிக்கொண்டு வர
எங்கள் கண்ணீரைத் தவிர
வேறெதுவும் இல்லை
எம்மிடம்..

தாயக் கனவுகளுடன்
இன்னும் பலர்
வெளிநாடுகளில்
வேலை ஆட்களாய்.....



பாடசாலைக்காலங்களில் முற்போக்கு கவிதைகள் பல எழுதிய இவர் இப்போதுகளில் எழுதுவதே இல்லை. இவரது பல கவிதைகள் தேசிய நாளிதழ்களில் வெளியாகியுள்ளது. புதுக்கவிதைகளில் அதிக ஆர்வம் உள்ள இவரின் கவிதைகள் சமூக அவலத்தைப் படம்பிடித்துக் காட்ட வல்லவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேகம பஸான்

# விடுகை கோரும் விடுதலைக் கைதி

வீர உணர்வு கொண்டு
கோரப்பிடியர்களை - ஆசை
தீர உதைத்து
கைதியானவனல்ல

கடைத்தெருவில் கன்னியர்கள்
நடைபோடும் பொழுதுகளில்
தடைபோட்டு இம்சிக்கும்
தடியர்களை அடக்கி
நான் கைதியாகவில்லை

யுத்த வெறியர்கள் எமை
ஆக்கிரமித்த போது
அத்தனை பேரையும் எதிர்த்து
நான் கைதியாகவில்லை

அடுத்த வீட்டு கூரை உடைத்து
எடுத்த நகைகளுக்காய்
தடுத்து வைத்து நான்
கைதியாகவில்லை

தேர்தல் காலமொன்றில்
கூடுதல் நேரமொன்றில்
கலவரக்கட்டுப்பாட்டில்
கைதியானவனும் அல்ல

சுதந்திரக்காற்றை
சுவாசிக்க எண்ணி
வெற்றிக் கொடி பிடித்து
அகிம்சைவழி
போராடியவனுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாக தேசத்தில்
அக்கினிப் பூக்களை
அள்ளித்தெறிக்கும்
அதிசயப்பறவைகளின்
அசைவுகளை தனியாய்
அடக்கியதற்காகவும் அல்ல

உடைமைகளையும்
உயிர்களையும்
பறித்ததற்காய்
நான் கைதாகவில்லை

அடக்கமுடியா
அவசரத்தில்
தெருமுனையில்
சற்று ஒதுங்கியதற்தற்காய்
கைதானேன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேகம பஸான்

# உணர்வுகளால் தூரப் போகிறேன்

வண்ண இளஞ்சிட்டுக்கள்
வளாக மயிலின்
இறக்கை விரித்து
நர்த்தனமாடி
வானின் சிறகுகள் கொஞ்சம்
கீழிறங்க நடந்து வந்தோம்
பல கலை கற்க

வலியோடும்
என் விழியோடும்
விட்டுசென்ற சில
நினைவுகளை காற்று
உங்கள் முன் கொண்டுவரும்

மன்னிப்புக்கேட்கின்றேன்
ஏதேனும் தேனில் நின்று
தவறிய சில வார்த்தைகள்
வடுக்களாய் வதைத்திருக்கும்
பசுஞ்சோலைப்பார்வை
சிலவேளை சுட்டிருக்கும்
கோபங்கொண்டு என்
அன்புக்கரங்கள்
தவறுகள் இழைத்திருக்கும்
மன்னித்துக்கொள்ளுங்கள்

தடைகளை மேவிப்பாயும்
நதிகளே நீர் வீழ்ச்சியாகும்
நாமும் மேவிப்பாய்வோம்
புற்களும் பயன்பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள்கள் எனும்
மேடையில்
விரல்கள் எனும் பேனை
நர்த்தனமாட
வந்த வரிகள் இது

ஆற்றங்கரையோரம்
மீன் அள்ளும் அவனைப்போல
பொறுமையாய்
வெறுமையாய் வந்து
நிறைகுடமாய்
திரும்புகின்றோம்

வானில் வீசும் காற்றுக்கள்
தடைகளில் திசைமாறும்
தவிப்புக்களை
கழற்றிவிட்டு
நாமும் நற்திசைமாறிப்போவோம்

மீண்டும் தவறுகள் நீர்
கண்டிருப்பின்
மன்னித்துக்கொள்ளுங்கள்



பட்டதாரியான இவர் கவிதை உலகுக்கு புதியவர் இருந்தாலும் பல நல்ல கவிதைகளின் சொந்தக்காரர். பல்கலைக் கழக காலத்திலேயே இவரது கவிதைகள் பாராட்டு பெற்றுள்ளன. அனுராதபுர இலக்கிய குழுமத்திற்கு புதியவரான இவரிடம் நிறைவான ஆக்கங்களை எதிர் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எல். வஸீம் அக்ரம்*

# காட்டு வாசியின் கோவனம்

இரவுகளில் அடங்காதவைகள் அவை

நீட்சி அடைந்த பொழுதின்
மர்மமாய் உன்னை அடைகிறேன்

எனக்கே ஆன தைரியத்தின்
அனைத்து வீரியத்தையும்
உன்மீது நிரப்புகிறேன்

சந்தோசத்தின் வர்ணிப்புக்களை
காற்றில் அலைமோத விடுவதும்
ஒவ்வொரு வானத்தில் பறக்கவிடுவதும்
எனது இலட்சியமாக்குகின்றேன்

என் புன்னகை தவழும் நொடிகளை
உனக்கே அர்ப்பணம் செய்கின்றேன்

எனது அதிகாரத்தை
உன்னிடமே அடக்கம் செய்கிறேன்

எனது அறியாமையையை
உனக்குள் புதைக்கின்றேன்
மற்றும் மறக்கின்றேன்

இந்தப் பரிதாபத்தின் நிலையை
எனக்கு தெரியாத கண்களால் பார்க்கின்றேன்

விடிந்ததும் கலைந்தேன் பிடிபடாதவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எல். வஸீம் அக்ரம்*

# ஓவியமொன்றிலிருந்து உதிரும் உணர்வுக் கோடுகள்

இயந்திரத்தின் அச்சாணி சுழலுவதுபோல்
மாறிப்போன
வாழ்வின் வியாக்கியானப் பொழுதில்
என் நகலின் புன்னகைப் படம்
வெளிச்சத்தில் மிதக்கின்றது.

உயிரணுக்களை
நெறிப்படுத்தும்
நாட்கொல்லியின் தீப்பந்தத்தில்
இருப்பின் அடைவுகள்
சாம்பலாய் கரைகின்றன

உணர்வுகளின் சாந்தம்
உலர்ந்து எரிகின்றது

சந்தோசத்தின் இழைகள்
பிடுங்கப்பட்டு
அசுரவேகத்தில் வீசுகின்ற
அனல்காற்றில்
தொங்கவிடப்படுகின்றது

சிவந்த விழிகளின்
கடூரப் பார்வைகளால்
நான் மயக்கமடைகின்றேன்

இந்தப் பகலின் அசைவுகளில்
என் சக்தி சரணடைந்து விட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானோ வெளியே
புலரமுடியாது
நரகத்தைக் காணுகின்றேன்

என் அழகு தற்கொலை செய்கின்றது
என் வசந்தம் தூர்ந்துபோயிற்று
என் தேன் நிலவு
அருவருப்படைந்துள்ளது

என் தனிமையில் குலைந்த மௌனம்
என் குழந்தைகளின் அலறல்
இவற்றுக்கு முன் என் மனம்
உடைந்து உடைந்து
தேற்றமுடியாத சகதியில்
அலைகின்றது

நம் காதல் செய்திகள் சாக்கடையாக
உன் கள்ளக்காதல் குஷியாக
நானோ துயரத்தின்
நொடிகளைச் சுமக்கின்றேன்

நமது குழந்தைகளின் பசியலறலும்
அவர்களது ஏக்கமும்
எனது மனக் கசப்பும்
இன்னும் நமது இல்லத்தில் கலந்த
உனது நினைவுகளின் நிழல்களும்
இவற்றின் துயர வடுக்களின் ஓலத்தில்
நீ பிரிந்திருப்பது
உனது வாழ்வின்
கல்லறை நாட்களை
காவிச் செல்லவே

கணவன் என்ற நம்பிக்கை
கனவு என்ற மயமாக
நானோ பரிவு என்ற வளாகத்திலிருந்து
பரிவு என்ற ஓவியம் வரைகின்றேன்



படிகளின் பிரதம ஆசிரியரான இவரின் இரண்டு கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன 'மண்ணில் துளாவும் மனது', 'ஆக்கிரமிப்பின் கால் தடம்' ஆகியவையே அவை. நவீன புதுக்கவிதையின் யுக்திகளை வெகுவாக அறிந்துள்ள இவர் இன்றுகளில் பரவலாக அறியப்பட்ட ஒரு நல்ல கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசாம் பாரூக்

# உறவுகள்

பாரினிலே உறவாடும் உறவுகளே
பக்குவமின்றி நீ போன பாதையினிலே
பதறாது திரும்பி பார்க்கையிலே
பலவாறு திரிபடைந்து இருக்கிறதே
சேர்ந்து நின்ற சொந்தங்களே
சேதமாகிப் போயாச்சு
ஈழத்து போரில் அவை
இருளடைந்து போனதா - இல்லை
மேலைத்தேய மோகத்தில்
இயந்திரமாய் ஆனதா?

பாட்டியின் மூட்டுவலி
கேட்டுநிற்க யாருமில்லை
பேரனுக்கு பேய்க்கதைகள்
சொல்லித்தர ஆளுமில்லை
இரத்தமுள்ள இயந்திரமாய்
மாறிவிட்டான் மனிதன்
புதுப் புதுப் உறவுகள் தழைக்க
பூர்வீக உறவுகள் இறக்கும்
அன்று, அத்தை மடி மெத்தை என பேச்சு - இன்று
அத்தை மாமன் சொத்தையாய் போச்சு
நாத்தனார் கொழுந்தனார் நெடு தூரமாச்சு
பாட்டனும் பூட்டியும் கண்டு பல்லாண்டாச்சு
அங்கிள், ஆண்டி என்று மொத்த உறவும் முடிஞ்சு போச்சு

உறவுகள் என்பது வெறும் வேஷம்
உணர்ந்தாகி விட்டது உங்கள் நேசம்
நம்பியதால் அடைந்தோம் நாசம்
தாயிடம் மட்டுமே உண்டு பாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசாம் பாரூக்

# அரபுலகம்

கடலாய் மக்கள் கடற்கரையில்
கன்னியர் பலர் நீர் அலையில்
சிறப்புமிக்க அரபுலகம்
சீரழிந்து போனதில்

கர்வமும் கவர்ச்சியும்
மங்கையும் மதுவும்
அடிமைத்தனம் அடாவடித்தனம்
அடியோடு அழிக்கவந்த
அன்னல்நபியின் அரபுலகம் இது

அனைத்தும் இங்கே
அரங்கேறுகின்றது
அறைகளினுள்ளே
யாவரும் அறிந்த இரகசியமாய்

மதுவுக்கு தடையுண்டாம் இங்கு
மாற்றானுக்கு பெர்மிட்டும் உண்டு ??
பெண்ணுக்கு பெருமையுண்டாம் இங்கு
சில்லறைக்காய் சீரழியும்
பெண்களும் உண்டு ??

சட்டங்களும் சட்டப்படி உண்டாம் இங்கு
சட்டை பார்த்து செத்துபோகும் சட்டங்களும் உண்டு ??
பரம்பரை ஆட்சிதான் நடக்குதாம் இங்கு
பல ஊழல்கள் நடப்பதும் உண்டு ??

இருப்பினும் இதற்கிடையே
அல்லாஹ்வை அஞ்சி இருப்போரும்
அருமை நபி வழி நடப்போரும் பலர் உண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகமே இல்லையடா
சத்தியமாய் சொல்லுகின்றேன்
பெயர்கூட தெரியாத
பேரழிவு பெற்றிருக்கும்
பெருமானாரின் பிரார்த்தனை
பிரதிபலிக்காவிட்டால்

உண்மையிலேயே
உளறிவிட்டேன் உண்மைகளை
உணர்ந்தவர் பலர் இருப்பார்
இந்த உலகினிலே



நட்புள்ளம் கொண்டவர்
அன்மைகளில் பல நல்ல
கவிதைகளை எழுதி அசத்தி
வருபவர். இவரது கவிதைகளை
இணையங்களில் காண முடிகிறது
முற்போக்கு சிந்தனை கொண்ட
இவரின் கவிதைகள் உள்ளத்தை
தொடும் சக்தி வாய்ந்தவை
தொழில் நிமித்தம் கட்டாரில்
வசிக்கும் இவர் அங்குள்ள
அவலங்களையும் தனது
கவிதைகளுக்கூடாக படம்பிடித்து
காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன்சி கபூர்

# சிறகு விரிக்கின்றேன்

சிறு புள்ளியாய் - நீ
தொலைதூரம் பயணிக்கையில்...
நானும் சிறகு விரிக்கின்றேன் உன் நிழலோடு!
உன் நகர்வுகளின் ஒலிப்பதிவுகள்
இப்பொழுதெல்லாம்
பத்திரப்படுத்தப்படுகின்றன- என்
நெஞ்சில் ஞாபகங்களாய்!
உன்
நேசத்தை - நான்
வாசிக்கும் ஒவ்வொரு கணங்களிலும்....
குரல்நாண்கள் குதூகலிக்கின்றன!
உன் பார்வைபடும்
பாலைவனப் பூமியில்- நானும்
ஜனனிக்கின்றேன்... உன் பாதச்சுவடுகளாய்!
உன் சந்திப்புக்கள் மறுக்கப்படும்
என் பொழுதுகளின்
விழுதுகள்... அழுது புலம்புகின்றன.!
என் வீட்டு ஜன்னல்களில்...
ரகஸியமாய்ப் படியும் - உன்
விம்பக் கவிதைகள் யாவும்
பிரமிப்புக் காட்டுகின்றன...
பிரமிட்டுக்களாய்!
உன் காத்திருப்பில் - எனை நிறுத்தி
காதோரம் சிணுங்கல் பூட்டி
பூரித்த நொடிகளெல்லாம்...
தொடுவானச் சூரியனாய்
பூமியிலே அழகு காட்டுகின்றன!
சின்னவனே...!
தென்றல் கூட எனைத் தீண்ட
அனுமதியில்லை! இருந்தும்...
உன் கரம் தா - என்
கண்ணீரைக் கழற்றியெடுக்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன்சி கபூர்

# இரவின் மடியில்...

பனித்துளிகள் மோதும் இரவினை...
ஊசியாய் துளைக்கும் காற்று!
நிலாவொளியின் ஒளிக்கசிவில்...
களவாய் விழித்திருக்கும் வானம்!

ஓசை தொலைத்த நிசப்தங்களின்
மெல்லிசையில் மயங்கும் நம் விழிகள்...
அடிக்கடி...
கனாக்களுக்கு மனுப் போட்டு
காத்துக் கிடக்கும்!

இருள் வயலில் விதைக்கப்பட்ட
வான் வைரங்கள்...
வெட்கித்துக் கிடக்கும்
தரைப் புன்னகையின் மோகத்தில்!

அல்லிக் காகிதத்தின்
மையல் வரிகளில் - தன்
மொட்டவிழ்த்து - நறுமண
மெட்டுக் கட்டும் மல்லிகைகள்!

சூரியக் குமிழின்
நேசம் நிரப்பி...
சந்து பொந்துகளில்...
தம் பெருமை பேசும் மின்விளக்குகள்!

பூமிப் பாறையின்
நங்கூரத்தில் - மனித
உயிர்கள் உறக்கத்திற்காய்
தரித்திருக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ச் சீண்டலில்...
விழி விளக்குகள் விறைத்துக் கிடக்கும்!

இரவுத் தூரிகையின் ஓவியத்திலோ
மௌனிப்புக்கள்...
மனசை அறுக்கும்
மானசீகமாய்

கலைந்தோடும் மேகங்கள்...
கரித் தேசத்தினை
தத்தெடுக்கத் துடிக்கும்!

இயக்கச் சாவி துறந்து - தன்
இதயம் களைத்து - இளைப்பாறும்
இவ்வுலகம்!

அழகின் சொப்பனத்தில்....
வழுக்கிச் செல்லும் - இந்த
இரவின் மடியினில்...
என் விழிகளோ ஏக்கம் நிறைத்துக்
காத்திருக்கும் - புது
விடியலின் பாதச்சுவட்டுக்காய்!



சுமார் பதினைந்து
வருடகாலமாக எழுதிவரும்
இவரிடம் காத்திரமான நான்கு
கவிதை தொகுதிகளை
போடுமளவுக்கு கவிதைகள்
குவிந்துள்ளன, வெறும்
பெண்ணியம் சார் மரபுக்குள்
தன்னை சுருக்கிக் கொள்ளாத
இவரது கவிதைகள் இப்போது
இணையங்களில்
பிரபல்யமாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை

தோல்விகளற்ற வாழ்க்கையில்லை
தோற்காதவன் மனிதனுமில்லை
வெற்றி என்றும் பெற்றிட
நாம் தேவர் அம்சமுமில்லை

தோல்விகள் கண்டாலும்
துன்பத்தில் துவண்டாலும்
நாளை என்றோர் நாளுண்டு
முயன்றால் நமக்கும் வழியுண்டு

இலட்சியம் என்பது
சோம்பேறிக்கு எட்டமுடியாத எவரெஸ்ட்
உழைப்பாளிக்கு
அது எட்டும் வரை இல்லை ரெஸ்ட்

கனவுகள் காணச்சொன்னார்
நம்மை அப்துல் கலாம்
இலட்சியக் கனவுகள் கண்டால்
நாமும் அவர் போலாகலாம்.

காலம் உனக்காகக் காத்திருக்காது
காலன் உன்னை அழைக்கும் வரை
காலமெல்லாம் நீ உழைத்திடு
ஞாலமெல்லாம் போற்ற வாழ்ந்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஃப்ராஸ் இஸ்மாயில்

# சீதனம் கேட்கா மாப்பிள்ளை

கல்யாண வீடு அது
தனிக்களையுடன்
உணவின் மணத்துடன்
புதுப்பொலிவுடனின்று
மிளிர்ந்துகொண்டிருக்கின்றது

நன்றாக சாப்பிட்டு
பெரிதாக ஏப்பம் விட்டு
வெளிவந்த எம்மவர் சிலர்
ஒளிவாக கிசுகிசுத்தது
தெளிவாகக் கேட்கிறது

சீதனம் கேட்கா மாப்பிள்ளையாம்
சீரளுவரிசையும் தேவையில்லையாம்
சோழியன் குடுமி சும்மா ஆடுமா
குறையேதுமின்றி இம்மனம் வருமா
மாப்பிள்ளையிடம் ஏதும் குறையுண்டு
மறைக்கவே இப்படித் திருமணமொன்று

கேட்ட என் நெஞ்சில்
இனம்புரியா வலி
மாப்பிள்ளை என் நண்பனன்றோ
மாசுமறுவற்றவன் அவனன்றோ
சீதனம் கேட்டால் பேராசை
கேட்காவிட்டால் பழியோசை
என்று திருந்தும் இம்மூடத்தனம்
நின்று வருந்தும் என்மனம்

சீதனக் கொடுமை ஒழிக என்று
குரலுயர்த்தும் மரியம் தாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளைக்கு குறையுண்டென
குரல் தாழ்த்திக் கூறுகிறாள்
மணப்பெண் மனதையும் வருத்துகிறாள்

சீதனம் கேட்பது தகுதியொன்றா
கேட்காவிட்டால் தவறுமொன்றா
கேட்பவனை தட்டிக் கேட்காவிடினும்
கேட்காதவனை தட்டிக்கொடுக்க வேண்டாமா

சுற்றமும் நின்று
பல கதைகள் பேச
பேசா மடந்தையாய் வீற்றிருந்த
பேகம் அவள் மணப்பெண்ணாம்
பேசுகிறாள் வாய் திறந்து

கூடுதலான குறைகள் இருந்தாலும்
கூசாமல் தன்னை விலை பேசும்
கோழை ஆண்கள் மத்தியிலே
சீதனம் கேட்கா மாப்பிள்ளை
இவரிடம் குறை கோடியிருப்பினும்
இனியெனக்குக் கவலையில்லை
நெற்றியிலடித்தது போலவே
வெற்றிப் பெண்ணவள் சொல்லிட
வெற்றியுடன் தலைநிமிர்ந்தான்
சீதனம் கேட்கா மாப்பிள்ளை



இக்கிரி கொல்லாவையை
பிறப்பிடமாகக் கொண்ட இவர்
புதிய இளம் படைப்பளியாவார்.
இவரின் கவிதைகளுக்கு
பாடசாலை மட்டத்தில் பலத்த
வரவேற்பு இருக்கிறது வெகு
அண்மைக் காலத்தி இருந்து
எழுதிவரும் இவரின்
படைப்புக்கள் எதிர்காலத்தில்
பேசப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.இராஜேஸ்கண்ணன்

# என்னைத் தின்னும் கனவுகள்

நாளை பற்றிய
நேற்றையின் கனவுகளைத்
தின்று தின்று
மூளையில் வீழ்ந்தது
தொந்தி!...

நாளை பற்றிய
இன்றையின் கனவுகளும் தான்.

செரித்திடாக் கனவுகள்
புழுத்தன தொந்தியிடை.
நரம்புகள் குடைந்து
நெளிந்து நகர்ந்தன.
மூலை முடுக்கிலெல்லாம்
முகாமிட்டன நிரந்தரமாய்.

நரம்பைச் சல்லடைத்து
சதை சதையாய் தின்றொழித்து
குருதிக் குளத்தினிலே
குளியலிட்டு மகிழ்ந்தன.

கனவுகள் தின்னும் மனிதர்காள்...
கனவுகள் தின்னும் மனிதர்காள்...

சம்பந்தர் அப்பர்
யேசு புத்தர் காந்தி தொட்டு
கார்ல் மாக்ஸ் வரையாய்
தின்ற கனவுகளால்
நின்று நிலைத்தவரா?...

அங்கே பார்
யாரோ புதியவர்கள்
இன்னும் தின்னுகின்றார்
'இன்பக் கனவுகளை'!...
தம்மைக் கனவுகள்
தின்பதை உணராதார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.இராஜேஸ்கண்ணன்

# மீள் கட்டுமானம்...

மாலைகள் விழுகுது
மாலைகள் விழுகுது
மனிதர் பல் தெறிக்க
சிரித்துப் படம் பிடிப்பார்!...

தம்முள் தாம் குதித்து
தப்புத் தண்ணியதில்
தனக்குத் தெரிந்தபடி
தனியாய் நீச்சலடி!...

ஆவியது கொண்டலைவார்
யாரும் அதைக் கவனிக்கார்
அதைக் காக்க ஆயிரம் பேர்
அணிவகுக்க வைத்திடுவார்!...

தம்மைத் தாம் கிள்ளி மிக
வியந்தே மகிழ்ந்திருப்பார்
தரணியின் கண் களெலாம்
தம் மீதே என்றுணர்வார்!...

கோயிற்றலமென்றால்
தாமே கடவுளென்பார்
மரண வீட்டின் புகழ்
பிணமாய்த் தமை உணர்வார்!...

எல்லாம் நடக்குதென்பார்
ஏற்றம் காணுதென்பார்
எல்லாச் சிறப்புக்கும்
என்னிடமே வழியுமென்பார்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடிகள் நிமிருதென்பார்
மடைகள் பல திறக்குதென்பார்
பாதைகள் விரியுதென்பார்
பழுதில்லை ஒன்றுமென்பார்!...

நேர்முகச் சிந்தனையால்
நீளும் பாதையதன்
ஓரத்தில் ஒரு நாயின்
உடல் கிடந்து நாறுது பார்!...



யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்துறை விரிவுரையாளரான இவர் 'முதுசொம்', 'தொலையும் பொக்கிஷங்கள்' என்னும் இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும் "போர்வைக்குள் வாழ்வு' என்னும் கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். சிறந்த பேச்சாற்றல் மிக்கவராகவும் ஈழத்தில் சிறந்த சிறுகதைகளை படைத்து வருபவராகவும் திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.ஜெயசீலன்

# கருணை காட்டுங்கள்!

கவிதைகள் மீது கருணையினைக் காட்டுங்கள்!
கவிதைகள் இன்று
கருணை மனுப் போட்டு
தங்களைக் காப்பாற்றுமாறு... தமிழிடத்தில்
தஞ்சம் புகுந்ததனால்...
தமிழ் என்னைத் தூதனுப்ப...
"தகுதி இருக்கிறதோ இல்லையோ?
தமிழடியார்
ஏற்பாரோ? ஏற்காரோ?"
என அறியாப் போதினிலும்
கவிதையுடன் ஊடாடி நனவில் கனவு காணும்
கவிஞன் யான் என்பதனால்;
கவிதையது குற்றுயிராய்
துடிதுடித்துச் சத்துத் துளியுமற்றிருப்பதனைக்
கண்டதனால்...
அதன் மீது கருணை மிக மிகவும்
கொண்டதனால்... அனைவரையும்
கும்பிட்டுக் கேட்கின்றேன்...
கவிதைகளின் மீது கருணை கொஞ்சம் காட்டுங்கள்!

கவிதைகள் இன்று தமது முகமிழந்து,
கவிதைகள் இன்று தமது அழகிழந்து,
கவிதைகள் இன்று தமது உயிர்ப்பிழந்து,
கவிதைகள் இன்று தமது குணமிழந்து,
கவிதைகள் இன்று தமது இயல்பிழந்து,
கவிதைகள் இன்று தமது பொருளிழந்து,
கவிதைகளின் பண்பு
கவிதைகளின் அர்த்தம்
கவிதைகளின் நுட்பம்
கவிதைகளின் பங்கு
கவிதைகளின் தேவை... கௌரவம் இவை தொலைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளும் கவர்ச்சிக் கன்னியர் போல்
சில நொடிகள்
வந்து குலுக்கி விட்டுப் போகும் நிலைக்கு வந்து
நிற்பதனால்;
அதற்கு நிறை உணவு கிடைக்காது
முற்றி வியாதிகளில் மூழ்கி முடங்கியதால்...
காப்பாற்ற ஆட்களற்று அநாதை விடுதிகளில்
சேர்த்து விடப்பட்டதனால்
தீரா வலி சுமந்து
வாழ்கின்ற ஆசையுடன் வாடி
வயோதிபர் போல்
செய்வதறியாது திகைப்பதனால்...
வாக்கு மாறி
ஏதோ புசத்தத் தொடங்கியதால்...
தேடுவார்கள்
யாருமற்று ஆதரவுக்கு ஆட்களற்று
காப்போரும்
தங்கள் நலன்களுக்காய்... இவற்றின் தளர்ச்சியினைக்
காட்டி எவ்வாறு காசு பிழைத்திடலாம்
என்று அலைவதனால்... ஏய்ப்பதனால்...
ஜெகத்தீரே...!
கவிதைகளின் மீது கருணையினைக் காட்டுங்கள்!
கவிதையினைக் காப்பாற்றி
முன்பு அது அரியணையில்
வீற்றிருந்த மாதிரியாய் வேண்டாம்
உசாராகி
உண்டு உறங்கி எழுந்து தன் பணி செய்ய
ஏற்ற விதத்தில் அதனை எழுப்புங்கள்!
ஏற்றுங்கள் இரத்தம் அதனை உசுப்புங்கள்!
மூப்பில் இளைத்தாலும் சாகா வரம் பெற்ற
ஆற்றல் படைத்த அதை அணையுங்கள்...
அரவணைத்தால்
கூற்றை... அது ஜெயிக்கும்
கொஞ்சம் உதவுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.ஜெயசீலன்

# சித்திர விசித்திரம்

வாழ்வினது அர்த்தத்தை
வரைய முனைகையிலே
ஓர் நவீன ஓவியமாய்
ஒன்றும் உடனடியாய்
விளங்காத கோட்டுருவம்
வெண் திரையிற் தோன்றிற்று!
அழகோ ஏதும் ஒழுங்கோ
அகம் கவரும் வண்ணத்தின்
கலவைகளோ இன்றி
உயிர்த் துடிப்பு ஏதுமன்றி
வெறுமனே... பார்த்தால்
விளங்காத குழப்பமதாய்
கிடந்ததவ் ஓவியம்!
இது தான் இதன் பொருளாம்
என எவரும் கூற முடியா நவீன காலச்
சித்திர விசித்திரமாய்... அவரவரின் பார்வைக்கு...
கற்பிதங்களுக்கேற்ப
கதை சொல்லிப் பொருள் சொல்லி,
நவீன விமர்சகரின் நாவில்
இலக்கியங்கள்
சிக்கிச் சிதைந்து கந்தல் ஆகி நலிவதென
அவரவர்க்கு ஏற்றாற் போல்
அர்த்தம் வழங்கிடுது!
வாழ்வினது அர்த்தத்தை
வரைய முனைகையிலே
சோர்வும் நொருங்கித் தூளான
எதிர்பார்ப்பும்
இடியப்பச் சிக்கலாய்
இடறும் பிரச்சினையும்
வாழ்வின் குறுக்கு வெட்டில்
வடிவாய்ப் புலப்படுது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமெமது முகத்தோடு நாமெமது மிடுக்கோடு
யாரினதும் தயவின்றி வாழ்ந்த ஒரு காலத்தில்
வாழ்வினது அர்த்தத்தை
வரைந்திருந்தோம் ஓவியமாய்...
மோனாலிசா ஓவியமாய்
முகிழும் சிரிப்போடு
என்ன எழிலாக
என்ன தெளிவாக
அன்றிருந்த அதை நினைக்க...
நாம் தொலைத்துச் சிக்கலாக்கி
இன்று வாழும் எம்
வாழ்வின் கோர முகம்... மிரட்டிடுது!



காரைநகர் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றும் இவர் இரு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இவருடைய கவிதைகள் மிகவும் வீச்சானவையாக திகழ்வதோடு ஈழத்தின் முக்கியமான இளம் கவிஞராக இவர் விளங்குகிறார். இவர் சிறந்தவொரு கவிஞரங்கக் கவிஞரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாட்சாயணி

# ஒரு ஊரின் சோகம்

நீள விரிந்த நதியின் இடுக்குகளில்,
கூடு கட்டிய கனவின் குரல்...
கனத்து வழிகிறது
மீட்சிக்கான வழி ஏதுமற்று...!
மரணம் கவிந்த தெருக்கள்
ஊரெங்கும்.
தோரணங்களாய்த்
தொங்கிக் கொண்டிருக்கின்றன...!
இருட்டுக்குள்,
கறுப்பொன்றே நிறமாகிப் போன
விரக்தியில்...
நிறங்கள்
தற்கொலை செய்து கொண்டன...!
ஒளிப் பிசிறல்களைத் தேடும்
ஒவ்வொரு தடங்களையும்...
எட்டி மறைக்கிறது...
கருமையின் செறிவு...!
திசைகளைத் தொலைத்த
ஆட்காட்டி...
தன் குரலைத் தானே...
பின்பற்றி அலைகிறது...!
இருளின் திரட்சிக்குள்
வரி வரியாய் உலர்கிறது...
காற்றின் மென்னிழைகள்...!
புகை உமிழ்ந்துருளும்
வலிய சக்கரங்களின் கீழ்...
நடுநடுங்குகிறது...
பூமியின் தேகம்...!
நகரின் இரைச்சலுக்குள்,
அமுங்கிக் கேட்கிறது
தன் சுயத்தினை
மெல்ல மெல்ல இழந்து கொண்டிருக்கும்
ஒரு ஊரின் கேவல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாட்சாயணி

# குவளையை நிறைக்கும் திரவம்

மழைப் பொழுதொன்றின்
தேநீர்க் கோப்பை
நான்!
சூடாக நிரம்பியிருந்தேன்!

பருவங்கள்
என்னை
மாற்றியமைத்தன...!

நீ என்னை
பனித் தேசத்தின் மதுக் குவளை
ஆக்கியிருக்கிறாய்!

தேன் வண்ணத் திரவத்தால்
மூடுண்டிருக்கிறேன்!

எனக்கொரு கௌரவம்
கொடுத்ததாய் எண்ணி,
ஒளிரும் திரவம்
பளபளத்தசைகிறது என்னுள்!

நான் தேநீரால்
நிறைக்கப்படுவது
இனி,
என் வசத்தில் இல்லை!

உனது தாகம் தீர்க்க,
நீ கேட்கும் வேளைகளில்...
கேட்கும் திரவங்களால்,
நிரப்பப்படுவேன் நான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கோப்பையை
எனது விருப்பத்திற்கு...
எப்போது இனி என்னால்
நிரப்பவியலும்...?

நிரம்பிய குவளையின்
மீந்திருக்கும் சிறு வெளியில்
இப்போது எனதுயிர்
ஓடித் திரிகிறது...!

தயவு செய்து,
அந்தச் சிறிய இடைவெளியையும்
உன் மூச்சுக் காற்றால்
இட்டு நிரப்பி விடாதே!

அங்கே தான் இருக்கிறது!
நான் இழந்த,
மழைப் பொழுதின் தேநீர் வாசனையும்...
கூடவே என் உயிரும்!



கோப்பாய் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளரான இவர் 'தூரப்போகும் நாரைகள்', 'அங்கையற்கன்னியும் அவள் அழகிய உலகமும்', 'ஒரு மரணமும் சில மனிதர்களும்', 'இளவேனில் மீண்டும் வரும்' ஆகிய நான்கு சிறுகதைத் தொகுதிகளையும் 'கடவுளோடு பேசுதல்' என்னும் ஆன்மீகக் கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய ஐங்கரன்

# இரத்தக் கதை

இறுதியாக
இரத்தத்தின் கதையை எழுதுகிறேன்

இன்றைய நாளில்
இரத்தம் என்பதற்குரிய அர்த்தம்
என்னவென்பது
உனக்கு புரியாமல் இருக்கலாம்
அல்லது
உன் வாழ்நாளில் நீ
இரத்தத்தை காணாமலேயே இருந்திருக்கவும் கூடும்

ஆனால்
சற்று முன்னர் கூட நான் கண்டேன்
எனது உனது மற்றும் எல்லோரதும்
இரத்தத்தையும் அதை உறிஞ்சி உறிஞ்சி
குடிக்கும்
ஒரு பயங்கர ராட்சசப் பறவையையும்

அதன் வார்த்தைகள் சிவப்பாக இருந்தன
அதன் வாயும் சிவப்பாக இருந்தது
எனது உனது மற்றும் எல்லோரதும்
இரத்தத்தைப் போலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பெரிய ஐங்கரன்*

# அநாதைப் பயணம்

ஊர்ப் பயணம் பற்றி
உரைப்பதற்கு ஒன்றுமில்லை பெரிதாக

வீதியில் நிலாக்கள் இல்லை
வானத்தில் மலர்கள் இல்லை
காற்றில் மரண வாடையே அன்றி
மனித வாடைக்கு இடமே இல்லை

இடிந்த கோயில் என்று உணராமல்
விடியுமட்டும் வழிபடும்
ஆந்தைகள்
கட்டாக்காலி நாய்கள்
பட்டி மாடுகள்
இன்னும் பெயர் தெரியாப் பறவைகள்

ஆறுகள் கிணறுகள் மட்டும்
வற்றி வாழ்வதே இல்லை
மண்ணில் கற்களில் பாறைகளில்
எங்குமே
ஊற்றெடுத்துக் கொண்டே இருந்தன
மனித இரத்தமும் அதன் நிறங்களும்

இவற்றைத் தவிர
ஊர்ப் பயணம் பற்றி
உரைப்பதற்கு ஒன்றுமில்லை பெரிதாக



ஆசிரியராக கடமை புரியும் இவர் 'எனக்கு மரணம் இல்லை', 'ஞானக்கண்', 'வானவில்', 'கறுப்பு மழை' ஆகிய நான்கு கவிதைத் தொகுதிகளையும் 'இருபதாம் நூற்றாண்டுக் கவிதை' என்னும் கட்டுரைத் தொகுப்பையும் பல பாட நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவர் தொடர்ந்து இலக்கிய உலகில் முனைப்போடு எழுதி வரும் இளம் படைப்பாளியாவார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லக்குட்டி கணேசன்

# நாளையில் இன்று நலியும்

இங்கே
ஒரு அராஜகம்
வியூகம் அமைத்து...

அங்கு
இங்கு
எங்கு என்றில்லாமல்
எங்கும் குழப்பத்தை விளைவித்து

காரணமில்லாமல் காரியங்களை
கற்பிதம் செய்கிறது

அஞ்ச வேண்டியுள்ளது...

அஞ்சாறு நாளாய்
பட்ட துயர் போதும்

பனியும் குளிரும் என்று
பாயில் சுருண்டது காணும்

இத்தனைக்கும்?...

நம்பியவரைக் கழுத்தறுத்து
தம்பியவை சிலரைத்
தாளம் போட வைக்கிறது.

நல்லதல்ல...
நாளைய எம்மவர் மூச்சு
வீச்சாகலாம்.
வீச்சில்
விளக்கங்கள் தெளிவாகலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லக்குட்டி கணேசன்

# அத்வைதம்

அவன் போட்டியென்று வந்தால்
விலகி நிற்கிறான்
விலகி நிற்பதால்
பயமடைகிறான் என்றில்லை
பயந்தவன் போட்டியிட்டால்
துணிந்தவன் ஆகி விடுகிறான்
என்று பொருள் ஆகாது
சிந்தனை வேறு; பொருள் வேறு
வினை வேறு; வில்லங்கம் வேறு
வினையால் வில்லங்கம் பிறக்கலாம்
வில்லங்கத்தால் வினை சேரலாம்
இழப்பதற்கும் சேர்ப்பதற்கும்
சம்பந்தம் இவ்வளவு தான் உள்ளது
ஒளி வர இருள் போவது போல்
ஒளி போக இருள் கவ்வுவது போல்.
எல்லாம் மாயை என்று
தெரிந்து கொண்டால்
மனதுக்கு மகிழ்வு வரும்
மகிழ்வும் ஒரு நாள் மாயையாகும்.



இலக்கியத்தில் தீவிர ஈடுபாடு காட்டி வாசிப்பனுபவத்தின் ஊடாக கவிதைத் துறைக்குள் நுழைந்தவர். அபிசேகன் என்னும் புனை பெயரில் பல கவிதைகளை எழுதி வருபவர். சிறந்ததொரு கவிஞரங்கக் கவிஞர் ஆக திகழ்கிறார். விரைவில் இவரது கவிதைத் தொகுப்பு ஒன்று வெளிவரவுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெ.துஷ்யந்தன்

# குழந்தைகளாய் இருத்தல்

தனிமையில் ஆழ்ந்து கொள்ளும்
ஒவ்வொரு
அந்தகார இராப் பொழுதும்
வாழ்வு குறித்த
நடப்பியல்களை
மீட்டுக் கொண்டிருக்கின்றது.
அவை
வாழ்வு வெளியினுள்
ஒருபோதும் நிறைவேறா
நிர்ணயங்களை
நெஞ்சிலிருத்தி
கனாக் கண்டு கொண்டிருக்கின்றன.
ஆங்காங்கே படர்ந்து கொண்டு
நெஞ்சை அனலாய்
எரித்துக் கொண்டிருக்கும்
ஒவ்வொரு சம்பவிப்புக்களும்
மீண்டுமாய்
குழந்தைகளாகவே.
இருந்து விடலாம் போலான
உணர்வு நிலைகளை
உற்பத்தியாக்கிக் கொள்கிறது
நாளும் பொழுதும்.
வாழ்தலின் பிடிமானம் தகர்ந்து
இழப்புக்கள் குறித்து
கவலைப்பட வேண்டியதில்லை,
ஆறாத ரணமாய் படரும்
எனது நிலத்தின் துயர் குறித்து
மனம் வெதும்ப வேண்டியதில்லை,
நெஞ்சை உருக்கும்
காணொளிகள் பார்க்க வேண்டியதில்லை.
காதல் குறித்த ஏக்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேறாத ஆசைகள்
ஏதும் குறித்து
வருந்த வேண்டியதில்லை.
அம்மாவின் மடியில் கிடந்து கொண்டு
பசித்தால் முனகிக் கொண்டு
பாலை அருந்தியபடி
எதுவித கவலைகள் ஏதுமின்றி
அழுகையையும், சிரிப்பையும்
மொழியாய் வைத்துக் கொண்டு
குழந்தையாகவே இருந்திருக்கலாம்
இல்லை
இப்போது குழந்தையாகவே
மாறி விடலாம் போல
எண்ணத் தோன்றுகிறது.
காரணம்
குழந்தைகள் எதுவித
சலனமும் இல்லாதவர்கள்
ஆதலால் தான் என்னவே
இவ்வாழ்வு முறை வெறுத்து
மறுபடியும் குழந்தையாய்
இருந்துவிடத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெ.துஷ்யந்தன்

# அந்தி சாய்கிறது

அந்தி சாய்கின்ற
ஒவ்வொரு பொழுதும்
கொடும் அச்சங்களை
மாத்திரமே
இதய வெளிக்குள்
நிரப்பிக் கொண்டிருக்கின்றன.
இருளடர்ந்து கிடக்கும்
ஒவ்வொரு இராக்களும்
கபாலம் பிளக்கும்
பொழுதுகளாகவே
புலர்ந்து கொண்டிருக்கின்றது.
நேற்றும் இப்படித் தான்
யாரோ ஒருத்தன்
நடமாடிப் போனதில்
நடுநடுங்கிப் போயிற்று
எனது நிலம்.
காரண காரியங்கள்
ஏதும் புரியாமலேயே
நாமிருந்து கொள்ள
திரை மறைவில்
சில கைங்கரியங்கள்
நிகழ்த்தப்படுகின்றன
எம்மை நோக்கி.
அவை
எமதிருப்பின் நிச்சயங்களை
கேள்விக் குறியாக்கிச் செல்கின்றது.
ஏலவே உள்நுழைந்து
வாழ்வின் சமாந்தரங்களை
சங்காரமிட்டுக் கொண்டிருக்கும்
கொடும் காணொளிகள்
ஒரு புறமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு இராக்களிலும்
நெஞ்சை குடைந்து கொள்ள
மறு புறமாய்
இப்போதைய இராக்கள்
எம்மை சிதைத்துக் கொள்கின்றன.
தொடர்ந்து வரும்
பதட்டமான இரவுகளும்
இயல்பாய் அணையும்
காலமறியா மின்சாரமும்
அச்சக் கோடுகளை
மன வெளி எங்கினும்
கீறிக் கொண்டிருக்கின்றன.
விடியலை விரைவாய்
தேடிக் கொண்டிருக்கின்றது
ஒவ்வொருவரது நெஞ்சமும்.
இப்படியாய் நகரும்
ஒவ்வொரு நாட்களிலும்
பயங்களையும், நடுக்கத்தையும்
பரிசளித்தவாறே
ஒவ்வொரு நாட்களும்
அந்தி சாய்கிறது.



ஜீவநதியின் துணை ஆசிரியரான இவர் 'வெறிச்சோடும் மனங்கள்', 'மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள்' என்னும் இரு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவர் சிறந்ததொரு பாடகனாக விளங்குவதோடு சிறந்த இசைநாடக நடிகர் ஆவார். சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்பவற்றையும் திறம்பட எழுதிவருகின்ற துடிப்பான படைப்பாளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.அஜந்தகுமார்

# முலைகளுடன் அழுபவள்

பதற்றத்தை
மீண்டும் அணியக்
கற்றுக் கொள்கின்றன இரவுகள்

யாரோ ஒருவன்
எனது வீட்டில் வந்து குதிப்பான்
என்ற ஏக்கத்திலேயே
தூக்கத்தைத் தொலைக்கின்றன
விழிகள்

சருகுகள் உருள்வதை
நாய் நடப்பதை
பூனை மரத்துக்குப் பாய்வதை
அணிலின் கூடு விழுவதை
காதுகள் கூர்மையாக்கி கூர்மையாக்கி
இதயம் பெரும்பள்ளத்தாக்கில் விழுந்து தேம்புகிறது

எப்பொழுதுமே தாமதமாகிவரும்
அண்ணன்
என்னைக் காக்கும் காவலனாய்
இப்போது விறைத்து நிற்கிறான்

தொலைக்காட்சி முடுக்கி
தன்னைத் தொலைக்கும் அம்மா
என்னையே அச்சம் ததும்பும் விழிகளுடன்
உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்

எனது மார்புக் குவட்டில்
சாரைப் பாம்பாய்
வியர்வை ஊர்கிறது
அடிவயிற்றில் திருமால்
திரும்பிப் படுக்கிறான்

நான் ஏமாற்றியவனில்
எவனொருவன்
பிளேட்டுடன் வருகிறானோ என்று தெரியாமல்
என் முலைகள் இரண்டும் குலுங்கி அழுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.அஜந்தகுமார்

# அலை ஒன்றை நான் அனுபவித்தல்

அலையைப் பார்க்கிறேன்
உன்னைப் பார்க்கிறேன்
பேச வார்த்தைகள் வரவில்லை

நீ சென்றுவிட்டாய்
எனக்குள் அலையை
நான் பார்க்கிறேன்



ஆசிரியரான இவர் என்னும் கவிதைத்தொகுப்பொன்றையும் 'திசை' என்னும் கட்டுரைத் தொகுப்பொன்றையும் வெளியிட்டுள்ளார். கவிதை, சிறுகதை, விமர்சனம் என்பவற்றை சிறப்பாக எழுதி வருபவர். சிறந்த பட்டிமன்ற, கவிஞரங்க பேச்சாளர். இவர் 'புதிய தரிசனம்' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலியூர் வேல் நந்தன்

# மீளக் குடியமரும் நம்பிக்கை

மீண்டும் வந்துள்ளோம்
மீளக் குடியமர
எம் தாய் மனைக்கு
மகிழ்வு தான்
ஆனாலும்
கண்ணுக்கு முன்னே
காலம் செய்து விட்டுப் போன
கோலத்தை காணுகையில்
கண்கள் பனித்திடினும் - இன்று
ஏனோ அழுகை வரவில்லை
தொலைந்த உறவுகளும்
கலைந்த கனவுகளும்
அலைந்த காலங்களும்
மனதை விட்டகலா
நினைவுகளாய்ச் சுட்டெரிக்க
உடைந்து போன
வீட்டு முற்றமதில்
நின்றபடி
உடையா மனவுறுதியுடன்
மீண்டும் துளிர்க்கும்
வாழ்வின் மீதான எம்
நம்பிக்கையோடு
தொடங்கும்
எம் பயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலியூர் வேல் நந்தன்

# அழுகை நாடகம் (தொடரும்...)

'செல்லம்மா'வுக்காக அழும்
எங்கள் அம்மம்மாக்களே
ஒரு முறை உங்கள்
செல்லக் குழந்தைகளுக்காக
அழ மாட்டீர்களா
'கங்கா'வுக்காய் அழும் எங்கள்
'தங்கத்' தாய்மார்களே
ஒரு முறையேனும்
உங்கள் சொந்த மகளுக்காய்
அழ மாட்டீர்களா
'செல்வத்திற்காய்' அழும்
எங்கள் திருமதிகளே
ஒரு முறையேனும் உங்கள்
செல்லக் கணவருக்காய்
அழ மாட்டீர்களா
'துளசி'க்காய் அழும்
எங்கள் குடும்பத் 'தென்றல்'களே
ஒரு முறையேனும் உங்கள்
நல்ல மருமகளுக்காய்
அழ மாட்டீர்களா
இப்படி நீங்கள் தினமும்
யார் யாருக்காகவோ அழ
உங்களைக் கட்டிய பாவத்திற்காய்
நாங்கள் தினமும்
உங்களுக்காய் மட்டுமே
அழுகிறோம்.



தமிழ் ஆசிரியராக கடமையாற்றும் இவர் கவிதை, கட்டுரை, விமர்சனம் என்பவற்றை மிகுந்த ஆர்வத்துடன் எழுதி வருகின்றார். சிறந்ததொரு மேடைப் பேச்சாளனாக திகழ்ந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*க.பரணீதரன்*

# உயிர்ப்பு

பொறாமைத் தீயில் வெந்து
என்னை
பொசுக்கிட நினைத்தாலும்...

அகங்கார மமதை கொண்டு
என்னோடு
பகைமை வளர்த்தாலும்...

பொல்லாங்குகள் சொல்லி
என்மீது
அவதூறு புனைந்தாலும்...

பொல் எடுத்துப் பொங்கி
எந்தன்
பொறிகளைத் தகர்த்தாலும்...

பகைவனையும் அரவணைக்கும்
என் இதயம்,
உயிர்க்கும்!
பீனிக்ஸ் பறவையாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பரணீதரன்

# தலையெழுத்து

வாழ்விழந்து
வசந்தமிழந்து
வாழ்விடமிழந்து
வதனமுமிழந்தோம்.

வெறுமை உணர்வில்
வீரியமுமற்று
வேதாளங்களின் நடுவே
வேற்றுக்கிரக வாசியானோம்.

வரி வரியான எம்
வெற்றுடலம் கண்டு
விநோதம் என மகிழும்
விந்தை உலகம் இது.

விதியின் கையெழுதும்
தலையெழுத்தில் – எம்
வீதியோர வாழ்வும்
காட்சிப் பொருளாய்...



யாழ்.பல்கலைக்கழக உளவியல் பிரிவு இறுதியாண்டு மாணவனான இவர் ஜீவநதிச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராவார். இவர் 'மீண்டும் துளிர்ப்போம்' என்னும் சிறுகதைத் தொகுதியினையும் 'இலக்கியமும் எதிர்காலமும்' என்னும் கட்டுரைத் தொகுதியொன்றையும் வெளியிட்டுள்ளார். 4 நூல்களைத் தொகுத்துள்ளார். இவர் சிறந்த இசை நாடக நடிகராகவும் திகழ்கின்றார்.11 நூல்களை பதிப்பித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலசுதர்சன்

# நவகுதிரைகளும் இராஜகுமாரர்களும்

நவகுதிரைகளில் இராஜகுமாரர்களே
வீதியில் விரைந்தோடுக
விதிமுறைகள் தேவையே இல்லை
நீவிர் நெடுஞ்சாலைகளில் விரைகையில்
தலைக்கவசமும் தரியாதிருக்கலாம்
சோறோடு சொதியும் சேர்த்து
குழைத்து உண்ணும் வீதிகள் இன்றில்லை
செப்பனிட்ட செங்கம்பளவீதிகள்
உம் உலாவிற்காக மாத்திரமே
இருமருங்கிலும் காதல் கொண்டு
எழுவகை மகளிரும் நிற்கின்ற நினைப்பில்
நிறுத்தாது விரைக
பின்வரும் பரிவாரங்கள் உம்மை
முந்துதல் தடையாதலால்
உந்தித்தள்ளுக இன்னும் இன்னும்
முடிவினை முதலில் தழுவிடவேண்டும்
நவகுதிரைகளில் இராஜகுமாரர்களே
வீதியில் விரைந்தோடுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலசுதர்சன்

# இருத்தலும் இருப்பை இழத்தலும்

பின்தூங்கிப் பின் எழுந்து
அன்றாட கருமம் ஆற்றி
ஓடு தேடு நாடு
இந்நாட்டின் அரசியல்
ஆசனத்திலிருந்து தொடக்கம்
இங்கு நானே அமரவேண்டும்
எனக்கு பின் உறவினன் உற்றவன்
மற்றவர்களைப் பற்றி கவலையில்லை
'இருத்தலே' முக்கியம்
வேறு எதுவுமல்ல
ஆசனத்தைப் பிடித்தாகி விட்டது
அமர்ந்து கொண்டாலும்
ஆசுவாசப்படுத்த முடியாது.
இருக்கையை கைப்பற்றல்
ம்டுமே போதுமானதல்ல
இறுதிவரை இறுகப் பற்ற வேண்டும்
பகிரப்பிரயத்தனங்கள் பல ஆற்று
வராத தூக்கத்தை வரவழை
குறைந்த பட்சம் தூங்குவது
போலாவது நடிக்க கற்றுக்கொள்
கடந்து போகட்டும் எல்லாம்
விழித்திரையை மூடு, மூடி விலக்கு
மன அரங்கிலே காட்சி தெறிகிறதா
எப்படித் தெரியும்?
என்னென்று தெளியும்
அகத்தில் தெரியாத காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன்களினூடு
புறத்திலாவது தென்படுகிறதா பார்
புழுதி மறைத்த புறத்தே
தூரத்தில் ஒரு சிறு புள்ளி அளவிலாவது
வெளிச்சம் தென்படின்;
பற்றிக் கொள்!
பற்றாதே!
பற்றின்றி பற்று!
இருத்தலை விட்டு எறி!
இனியாவது வாழ வா!
வாழ்வை வசமாக்க இயலாது,
வாழ்வின் வசமாகு.

'நான்' மடிந்து போதலை
உணரத்தலைப்படு
அகத்திலே நம்மைக் காண்
புறத்தை புறந்தள்ளு...



யாழ்.பல்கலைக்கழக இரண்டாம் வருட தமிழ்ச்சிறப்புக்கலை மாணவானான இவர் 'மௌனமே வாழ்வாக.', 'அவல அடைகாப்பு' என்னும் இரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இலக்கியத்தில் ஈடுபாட்டோடு செயற்பட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் எம். ஷிபான்

# ஒரு ராணுவவீரனின் ராக்காலக் கவிதை

ஒரு பட்டாம் பூச்சியைக்கூட
பார்த்து ரசிப்பேனேயன்றி
தொட்டுப்பார்க்கத் துணிந்ததில்லை நான்,
தேகம் வலிக்குமேயென்று...!

சலசலத்தோடும் நதியின்
சங்கீத சுருதியில்
சகலமும் மறப்பவன் நான்...!

பௌர்ணமி இரவில் ஊரே உறங்க
பால் நிலாவொளியில்
பூமியை வாசிப்பவன் நான்...!

என் ஓட்டைக்குடிசையில்
ஒழுகிடும் மழைத்துளிகளில்
உயிர் கரைபவன் நான்...!

என்தோட்டப் பூக்கள்
தினம் தினம்
நான் வாசிக்கின்ற
அற்புதமான கவிதைகள்...!

இப்படியாய் வாழ்க்கையின்
வசந்தங்களை நான்
விசாரித்துக்கொண்டிருக்க
விதி என்னை ராணுவவீரனாக்கி
ரணப்படுத்துகின்றதே...!

இன்றைய இரவுக்காவலரில்
நானும் ஒருவன்.

என்னால்...
எதிரிகளின் ஊசலாட்டம்,
எங்கோ கேட்கும் வெடியோசை
எதுவொன்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்க முடியவில்லை.
அதோ...
அந்த வானம்
என்னமாய்ச் சிரிக்கிறது
நட்சத்திரங்களாய்
முத்துப் பற்கள்...!

பனைமரங்களின்
தலை கலைத்து
தடவிச்செல்லும் தென்றல்...!

தூரக்கடலின் அலையோசையில்
தேர்ந்த இசைக்கலைஞனின்
லாவண்யம்...!

அதுவென்ன சத்தம்...?
யாரவர்கள்...??
நிலத்தோடு நிலமாக
ராணுவத்தளம் நோக்கி
ரகசியமாய் நகர்வது யார்???

அடடா... அவர்கள்தான்!
எதிரிகளாய் எனக்கு
இனங்காட்டப்பட்டார்களே,
அவர்களேதான்!!

தன்னிச்சையாகவே
துப்பாக்கி எமனைத்
தொடுகின்றன கைகள்.

ஆசையாய் வளர்த்த பசுவை
அறுவைக்குக் கொடுத்ததற்காய்
ஐந்தாறு நாட்களாய்
அழுதபடி உண்ணாமல்
அடம்பிடித்தவன் நான்.

எப்படி...
எப்படிச் சுடுவேன்
அவர்களை?

ஓஹ்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி வருகிறார்கள்!

துப்பாக்கியைத்
தப்பாகப் பிடிக்கின்றன என் கைகள்.

என்னால் யாரையும்
கொல்ல முடியாது!

கம்பித்தடையை
நெருங்கிவிட்டார்கள்!

'ட்ரிக்கர்'மீது
'ஸ்டிக்கர்'ஆக
ஒட்டிக்கொள்கிறதென்
ஆட்காட்டி விரல்!

என்னால் யாரையும்
கொல்ல முடியாது!

தடை தளர்த்தி
தரையில் ஊர்கிறார்கள்!
விரலில் விறைப்பேறி
அழுத்தம் அதிகரிக்கிறது.

என்னால் யாரையும்
கொல்ல முடியுமா...?

மாதந்தோறும்
நான் அனுப்பும் பணத்தில்
சுவாசம் வாங்கும்
தாயே... தமக்கையே...
மன்னியுங்கள் என்னை.
என்னால் யாரையும்
கொல்ல முடியாது,
என்னைத் தவிர!

ராணுவ விறைப்போடு
வெடிக்கிறது துப்பாக்கி!

பெற்ற மகனை
யுத்தத்தில் இழந்ததற்காய்
உனக்குமேதும் பெரிதாக
இழப்பீடு கிடை க்கலாம் தாயே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் எம். ஷிபான்

# களையிழந்த கனவுகள்

எவனோ ஒருவனின்
மனைவியானபின்னும்
தேவைதானா உனக்கு
என்னைப்பற்றிய
விசாரிப் பூக்கள்?

விட்டுத் தொலை
வேற்றான் மனைவி நீ!

அப்போதைய ராத்திரிகளில்
ஒரு தேவதையாய்த்
தனித்து வருவாய் நீ
என் கனவுகளில்.

பட்டுப் பூச்சியின்
மென்மையும்
பட்டாம்பூச்சியின்
சிறகடிப்புமாய்
மனம் துடித்திருக்கும்.

காதல் அலைவரிசையில்
நம் கானங்களே
ஒலித்துக்கிடக்கும்.

இப்பொழுதெல்லாம்
உறங்கியும்கூட
கனவுகள் வருவதில்லை.

கனவு வந்தாலும்
நீ இருப்பதில்லை அதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்புள்ளிகளை வைத்துக்
காத்துக்கிடந்தேன்
கோலம்போட வருவாயென்று
ஒரே புள்ளியில்
மொத்தத்தையும் முடித்தாய்
ஒரு முற்றுப்புள்ளியை வைத்து.

எவனோ ஒருவனின்
மனைவியானபின்னும்
தேவைதானா உனக்கு
என்னைப்பற்றிய
விசாரிப் பூக்கள்?



மன்னார் உப்புக்குளத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் 1992ல் கவிதை எழுதத் தொடங்கினார். ஆரம்பத்தில் புதுக்கவிதையில் எழுதிய இவர் பின்னர் படிப்படியாக மரபுக்கவிதை எழுதி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.அமல்ராஜ்

# விவாகரத்து

என்னை
சிந்திக்க வைத்தவளும்
நிந்தித்து போனவளும்
அவள்தான்.

ஒரு இரவில்
ஒடிந்த பாசம்
விடிந்ததும் - ஒரு
மடிந்த வேசமாய்
இடிந்து போனகதை
என்னைத்தவிர
யாருக்குத் தெரியும்..

முதல் நாள்
பத்திரம் என்றவள்
மறுநாளே
பத்திரத்தோடு வந்தாள்.

என் காதலை
கட்டிப்போட - ஒரு
கையொப்பம் வேண்டுமாம்.

ஒரு கிறுக்கல் கிறுக்கியதில்
அவள் வடக்கே போனாள்
நான் கிழக்கே போனேன்
எங்கள்
பிடிவாதம் மட்டும்
மகன் தலையில்
மண்ணை சொரிந்தபடி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுப் பெற்றது
எங்கள் விவாகம்.
காரணமோ - அந்த
மோசமான விவாதம்.

அவள் விடுவதாய் இல்லை
நானும் முடிப்பதாய் இல்லை.
அவளும் நானும் முட்டியதில்
முதல் பிறந்தது
பிள்ளை
இப்போ பிறந்தது
தொல்லை.

நேற்றுவரை
என்னை நம்பியவள்
இன்றுமுதல் - தன்
வக்கீலை நம்புகிறாள்.

பறவாயில்லை
எனது தெரிவில்
தவறிளைத்தவள்
இந்த வக்கீல் தெரிவில்
சரிசெய்திருக்கிறாள்.
காரணம்
குடும்பங்களை பிரிப்பதில்
கெட்டிக்கார வக்கீலாம்
அவர்.
ஊரார் பேசிக்கொள்கிறார்கள்.
...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.அமல்ராஜ்

# ஓர் நிமிட நாயகி

எனது
இந்த
இரவல்
இலக்கியத்தின்
ஒரு நிமிட
நாயகி அவள்.

ஐந்து மீட்டரில் அவள் - அன்று
ஐம்பது கனவுகளோடு நான்.

அன்று
பக்கத்தில் வந்தது
பௌர்ணமி - பெண்ணே
அனைத்தும் கலந்த
வர்ணம் நீ.

ஒருமுறை வந்தாள்
ஒரே முறைதான் சிரித்தாள்
ஓரிரு வரிகள் மட்டும் பேச
ஒருவாறு அனுமதி தந்தாள்.

நடு நாக்கு
நடுங்கியதில்
வந்த வாக்கு - அங்கேயே
முடங்கியது.

நாக்கு மேட்டில்
விழுந்து எழுந்து
நிமிர்ந்த வார்த்தை
உதட்டில் புரண்ட போது
'வருகிறேன்' என்றாள்
கண்களால்.

மீண்டும் வலிந்து
தொண்டையில் திணித்த - அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றெழுத்து வார்த்தையை
சமாதானம் செய்வதற்குள்ளே
சாகப்போவதாய்
சத்தியாக்கிரகம் செய்தது
அவள் - என்
மனதில் விட்டுப் போன - அந்த
விடுப்புக் காதல்.

ஒரே நிமிடத்தில்
காதல் - இன்று
ஏனிந்த மனங்களிடையே
மோதல்..

அவளும்
வருவதாய் இல்லை.
நிலவும்
வளர்வதாய் இல்லை.
என்னைச்சுற்றிய காதல் இருள்
சொட்டுச் சொட்டாய்
குறைவதாயும் இல்லை.

வந்து போனவள் யார் - அன்றுமுதல்
என் மனதில் அக்கப்போர்.
ஒரே நிமிடம்
ஒரே பார்வை
விழுந்தது நான்
எழுந்தது அவள்.
இதுதான் காதலா?

மெல்லப் போனது
பாவை - இப்போ என்
கைகளிலெல்லாம் காதல்
ரேகை.
உதிர்த்துப் போனாள் ஒரு
சிரிப்பு,
யாருக்குத்தெரியும் - இப்போவென்
தவிப்பு??

என்னை - அவள்,
பூவிழி பார்வையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து போனாளா?
இல்லை,
கரு நிற தோகையால்
கடைந்து போனாளா?
கண்ணிரு வீச்சிலே
மயக்கிப் போனாளா?
இல்லை - என்னை
பொன்னுருக்கும் பார்வையாலே
மடக்கிப் போனாளா?

ஒரே ஒரு சிரிப்பிலே
எனக்கு
ஊட்டியையும் கொடைக்கானலையும்
ஒரே நிமிடத்தில்
காட்டிப்போனவள்
அவள்.

புலம்பி புலம்பியே
புத்திகெட்டுப் போனது
எனது
காதல்,
வீதியில் அன்று
போட்டுவிட்டு வந்தாலும்
இன்றும் - என்
இலக்கிய நாயகி
அவளேதான்
என்
வலது சோணையிலே.
.....



இவர் மன்னாரில் உள்ள வஞ்சியன்குளம் என்னும் கிராமத்தில் பிறந்தவர். இவர் "கிறுக்கல்கள் சித்திரமாகின்றன" என்கின்ற கவிதைத் தொகுப்பு ஒன்றையும் 'வேர்களும் பூக்கட்டும்' என்கின்ற உளவியல் நூல் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறார். கவிதை, இலக்கியம் தவிர்ந்த நாடகம், இசை போன்ற துறைகளிலும் ஈடுபாடு உள்ளவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி.ரமாப்பிரியா கருணைராசா

# எழுந்திடு எழுத்தாளனே

பொய்மைகளும் போலிகளும்
போட்டியிடும் சமூகத்தில்
உண்மைகளை உரக்கச் சொல்லி
விடிவை நோக்கிப் பறந்திடுவோம்

விழித்தெழு எழுத்தாளனே
நல்ல பல செய்திகளை
மக்களுக்கு எடுத்துரைக்க
விரைந்திடு எழுத்தாளனே

கல்வியெனும் செல்வமதை
கருத்துடனே வெளிப்படுத்த
ஊரறிந்த உண்மைகளை
உலகினிற்கு எடுத்துரைக்க
உயிர்த்திடு எழுத்தாளனே

விழுந்து நொருங்குண்டு
விரக்தி பூண்ட உறவுகளின்
உணர்வுகளை வெளிப்படுத்தி
உலகினிலே எடுத்துரைக்க
எழுந்திடு எழுத்தாளனே
எமக்குமோர் விடிவு நிச்சயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செல்வி.ரமாப்பிரியா கருணைராசா*

# நிவாரணம்

நீதி கேட்டு நிம்மதியிழந்து
நாதியின்றி நிலைகுலைந்து
நிர்வாணமாய் நிற்கின்றோம்

நிலைத்திருந்த நிலமதனை
நிவாரணமாய் அளித்துவிட்டு
அந்தரித்து நிற்கையிலே
அனுப்பினார்கள் நிவாரணத்தை

நேற்றிருந்து பார்த்திருந்து
நோன்புகளும் நோற்றிருந்து
காத்திருந்து பெறுவதற்குள்
கரைந்துவிடும் நிவாரணங்கள்

பாலுக்காய் பாலகனும்
பட்டினியால் மகளும்
அலைமோதித் திரிகையிலே
மானத்தை நிவாரணமாக்கி
அயல்வீடு செல்கின்றேன்
பால்மாவுக்காய்

இவர் மன்னாரில் உள்ள பாலம்பிட்டியில் பிறந்தவர். மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்கப்பாடசாலையில் கல்வி கற்கிறார். 2007 இல்மன்னார் வலயக்கல்வித் திணைக்களம் நடத்திய தமிழ்தினப்போட்டியில் மூன்றாம் இடம்
2008 இல் தமிழ்தின போட்டியில் குறுநாடக ஆக்கத்தில் 3ஆம் இடம்
2010இல் தமிழ்தின போட்டியில் மாகாண மட்டத்தில் 1ஆம் இடம் பெற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் அமுதன்

# வா மணப்போம் விதவை

வேண்டு மெமக்கும்
விடுதலை யென்று
தீண்டும் வெயிலில்
பட்டினி கிடந்துபின்
ஆகாது அதுவென்று
அறியும் ஒருநாளில்
தீட்டினோம் கூராயுதம்

ஆயினும் பெரிதாய்
ஆக்கிய தொன்றில்லை
பேயினுக் கெதிராய்ப்
போர்க்கொடி தூக்கியெம்
பூவையும் பொட்டையும்
இழந்தோம் - நம்வீட்டு
பூவைக்கு பூவைப்பார் யார்

புண்ணதுவே புண்ணாக
இருக்கட்டும் நெஞ்சத்தில்
மண்ணுக்காய் இல்லாமல்
மாண்டவென் தோழர்க்காய்
வென்றே தரவேண்டும்
விரைவாக சந்ததியை
வா மணப்போம் விதவை

இறுதித் தருவாயில்
உயிர்நீத்த உடற்கெல்லாம்
சிறுதீ மூட்ட ஆளில்லை
குற்றுயிராய்க்
கிடந்த உடலேறிச்
சுகம்கண்ட காடையரின்
பண்பாட்டைப் பார்த்தே பழகு

ஆண்டாண்டு காலமாய்
ஆண்ட பூமியினை
பூண்டோடு அழித்துப்
புன்னகையைச் சீரழித்தீர்
மாண்டோ போனோம்
மறவர்நாம் - வடலிகள்
மீண்டும் வானுயரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் அமுதன்

# பருவமெய்திய பின்...

பருவமெய்திய பின்தான்
மாறிப் போயிருந்தது
அப்பாவிற்கும் எனக்குமான
பிடித்தல்கள்

வாசலில் வரும் போதே
வீணாவா! வா வாவெனும்
அடுத்த வீட்டு மாமாவும்
அகிலாவின் அண்ணாவும்
போலிருக்கவில்லை அப்பா

மழை வரமுன்
குடையுடனும்..
தாமதித்தால்
பேருந்து நிலையத்திலும்..

முன்னும் பின்னுமாய் திரிய
காரணம் தேவைப்படுகிறது
அப்பாவுக்கு

துக்கம் தாளாமல்
அழுத ஒருபொழுதில்
ஆறுதல் கூறுவதாய்
அங்கம் தடவுகிறான்
அகிலாவின் அண்ணா

யாருக்கும் தெரியாமல்
வா மொட்டைமாடிக்கு
நிலா பார்க்கலாமென மாமா

இப்போதெல்லாம் பிடிக்கிறது
அப்பாவை



கணணி அறிவியலில் முதுமானிப் பட்டதாரிதரியான இவர் ''விட்டு விடுதலை காண்' (2009), 'அக்குரோணி' (2011) என்னும் இரு கவிதைதத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்
இவர் சிறுகதை, கட்டுரை, திறனாய்வு என்பவற்றையும் எழுதி வருகின்றார்.
அகஸ்தியர் விருது, கலைத்தீபம், கலைமுத்து பட்டங்கள் என்பவற்றைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அமல்ராஜ் ரெவல்*

# காசமில்லா தேசம் செய்வோம்

மன்னார்
மானிடரே
மன்னாரில் - காசமது
மன்னாது
திண்ணம்கொள் - அதிலுன்
எண்ணம்கொள்

காசமோ
காயத்தை
மோசம் செய்யும்
நாசம் செய்யும்

சுவாசத்தில்
வாசம் செய்து
வாதை செய்யும்

ஆசுவாசமாக
பேசும் போதும்
தும்மும் போதும்
தென்றலாய்
பற்றிக்கொள்ளும்
தொற்றிக்கொள்ளும்

தசைமீது
பசை கொண்டால்
வசையாகும் - அதன்
விசை வீழும்

நிறையான - உடலும்
குறைவாகும் - அது
கறையாகும்
தரை வாழ்வு
சிறையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவாளனே - இது
பக்றீரியாவென
பாருக்குச் சொல்லடா
பட்டவர்த்தனமாய்
யாருக்கும் சொல்லடா

காசமதன்
காரணமாம் - அதை
கண்டுகொள் - நோயை
வென்றுகொல்

மூன்று வாரத்திற்கு
மும்முரம் காட்டுமிருமல்
உணவின் மீதுனக்கு
ஊக்கம் வராதடா
நிறைவான உடலோ
குறைவாகும்
மாலையிலோ
மங்கலான காய்ச்சல்

இவையே நோயின்
அறிகுறியாய்
கோலோச்சும்

எளிமையாய்
சளியெடுத்து
பரிசோதித்தால்
பளிச்சென
வெளிச்சமாகும்

சரித்திரம் படைத்தவனே
சாத்திரத்தால் - நோய்
தீராதடா - நிலைத்தால் - அது
தரித்திரமடா

காத்திரமான
மாத்திரையை
அரச மருத்துவரோ
அறிவுறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதமாய் தந்திடுவார்

நிறையாய்
நிறுத்தாமல்
நீயாறு மாதமாயுண்டால்
துச்சமாய்
தூர ஓடிவிடும்
உடலும் தேறிவிடும்

பரம்பரையாய்
பரவும் நோயுமல்ல
கரம் கொண்டு
காத்திடலே - நல்ல
வரமாகும் - அதுவும்
அறமாகும்

கைக்குட்டை
கரம் கொண்டு வரும்
இருமலைத் தும்மலை
காற்றில் கலக்காது
காத்துக்கொள்

சளிதனை
அழித்திடல்
குழியில் புதைத்திடல் - அன்றேல்
எரித்திடல் வேண்டும்
இவையே எளிதான
முறையெனக் காண்பீர்

காசமில்லா
தேசம் செய்வோம்
இதுவே - எம்
கோசமென்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழியாள்

வல்லினயுடையாள்
மெல்லின நடையாள்
இடையின கொடியிடையாள்

முதற்சங்கமுதல்
கடைச்சங்கம் வரை
நடை பயின்றவள்
இன்னுந்தான்
நாணுகின்றாள்

செம்மொழி
சிறப்பாளே
சின்னவள் - முகம்
சிவந்தனவோ!

இயல் இசையால்
இன்னிசை கொண்டு
நாடகமாடும் கொடியவள்
புயல் விசையால்
எம் தசைகளில்
பசை கொண்டவள் - நாற்
திசை கண்டவள்

தஞ்சை நிலமகள் - சொற்
பஞ்சமில்லா
வஞ்சியவள்

துல்லியமாய்
தொல்காப்பியமும்
பறைசாற்றும்
புறனாணூறும்
எட்டுத்தொகை
பத்துப்பாட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுத்திக்கும் - முரசு
கொட்டச்செய்தவள் - நீதானே!

வள்ளுவனின்
வாயடக்கா
வரியிரண்டை
எள்ளுருண்டையாய்
எளிதாயமுதூட்டியவள்

பாரதியின்
வாயருவி - நீ
பாதிரியும்
பாதியிலே
வீரமுனியாக்கி
தேம்பாவணியாக்கிய
தேவனைத் தேடவைத்த
தேவ ஊக்கி

விடை காணா
விடலையவள்
தடையில்லா
மடையவள்
புடைசூழ்ந்த
ஆழக்கடலவள்

பூப்படைந்ததால்
காப்படைய
ஐம்பெரும்
காப்பியத்தை
அணிகலனாய்
அழகுற
அணிந்தாயோ?

பைப்பிள்
பகவத்கீதை
அல்லாஅளித்த
அல்-குறானும் - உன்
அழகு மொழியால்
அசத்தியவள் நீதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தரும்
பக்தரும்
முத்தியடைந்தோரும்
பித்தம் கொண்டு
சத்தான உன் மொழியை
உண்டனரே

மதமாற்ற வந்தவருக்கே
மதம்கொள்ள
வைத்தவள் நீ

கம்பனை வைத்து
வம்பிழுத்தவள்
தெம்பாய்
தமிழ் கவிக்கு
களந்தந்தவள்
வளந்தந்தவள்

ஓதி முடித்திடா
வேதமவள்
ஓவியத்திலடங்கா
வர்ணமவள்
சொர்ணமவள்

சந்தன மாலையில்
சங்கதியை
எம்பதிக்குச் சொல்ல
சங்கொலித்து விழாவா?
கட்டழகு கன்னியவளுக்கு
கட்டியமா?
மேளம்கொட்டித்தான் - கூறனுமா

*வாழ்க தமிழ் வாழ்க தமிழ்*
*வாழிய வாழியவே*



இவர் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். மன்னாரில் பல கவியரங்குகளை செய்து வருகின்றார். 'விழிகள் தீண்டும் விரல்கள்' என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னூரான் ஷிஹார்

# இனிப்பதே இல்லறம்

வருடங்கள் ஐந்தாச்சு வனிதையுன்னை மணந்து
வலிகளும் சுகமென்றாச்சு வாழ்க்கையில்நாம் இணைந்து
உருவானது நமக்கெனவோர் மகவும் நாம் கலந்தே
உரிமையோடு கொஞ்சிட உருகிட மனம் நெகிழ்ந்தே.

துன்பங்கள் நமைத் துளைத்துத் துடிக்கவைத்ததுண்டு
துயரங்கள் நம்வீட்டில் குடியிருந்ததுண்டு
இன்பங்கள் ஏழுதெரு எட்டிநின்று பார்த்த
ஏக்கங்கள் இனியில்லை இந்த சுகம் போதும்.

செல்வமென்று எத்தனைதான் சேர்த்தாலும் மானிடர்
செல்கையிலே கொண்டுபோகும் செல்வமேது பாரிலே
இல்லறத்தில் காணுகின்ற இன்பமொன்று போதுமே
இறுதிவரை இருதயத்தை இளமையாக்கிக் காணுமே.

வாரிசிவன் வாயில்நின்றும் வரும் மழலை மொழியிலே
வாழ்வின் பயன் கண்டுவிட்ட வலிமையது தோன்றுதே
மாரிகண்ட பயிர்நிலமாய் மனமது கொண்டாடுதே
மார்பிலிவனைத் தூங்கவைக்க மகிழ்வுடனே நாடுதே.

வையகத்தை ஆள்பவனை வருணனென்று கூறுவேன்
வைதீகம் கொண்டவனை வாயார வாழ்த்துவேன்
தையலுன்னைத் தாரமாயும் தளிரிவனைத் தனயனாயும்
தந்தவனை வள்ளலென்று தலைபணிந்து போற்றுவேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னூரான் ஷிஹார்

# மெய்ப்பட வேண்டும்!

இல்லார் கைகளில் பணமும்
இருப்போர்க்கு ஈந்திடும் மனமும்
கல்லாதாரிடம் அறிவும்
கற்றவரிடத்தில் பணிவும்
பொல்லாதோர்க்குநற் குணமும்
புண்ணியர்க்கென்றுமே நலமும்
இல்லையே என்கின்ற ஏக்கம்
இனியேனும் மெய்ப்பட வேண்டும்!

நேருக்கு நேர்மோதும் வீரம்
நிழலாகத் தொடர்கின்ற நேசம்
பேருக்காய் ஈயாத தானம்
பெருமையை விரும்பாத ஞானம்
ஊருக்காய் உழைக்கின்ற தாகம்
உணர்வோடு போராடும் வேகம்
யாருக்கும் கிட்டாத பேறாம் - இவை
யாவுமே மெய்ப்பட வேண்டும்!

உரிமைகள் மறுக்காத அரசு
உரிமைக்காய் முழங்கிடும் முரசு
தரம்பார்த்துப் பணிகின்ற சிரசு
தகுதிக்காய்த் தருகின்ற பரிசு
அரிதாரம் பூசாத மனது
அறிவோடு வளர்கின்ற வயது
பொருள்தேடிப் போராடும் புவியின்
புனர்வாழ்வாய் மெய்ப்பட வேண்டும்!

கலைமீது தணியாத மோகம்
கணப்போதில் மறைகின்ற சோகம்
விலையில்லாக் கல்வி விவேகம்
விடிவுக்காய் உழைக்கின்ற தேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான சுகம்காணும் யோகம்
நீதிக்காய் வளர்க்கின்ற யாகம்
அலைபோல அணியாக வந்தே
அமைந்திங்கு மெய்ப்பட வேண்டும்!

பெற்றோரைப் பணியாத பிள்ளை
பிறந்தமண் மதியாத பிரசை
கற்றோரை அறியாத சபைகள்
கருத்தின்றிப் பரிமாறும் உரைகள்
பற்றோடு புரியாத பணிகள்
பரிவோடு தீர்க்காத பிணிகள்
அற்றதோர் அற்புத வாழ்வு
அகிலத்தில் மெய்ப்பட வேண்டும்!

இதிகாசம் பலநூறு கண்டு
இயல் இசை நாடகம் கொண்டு
அதிகார வர்க்கத்தை வென்று
அகிலத்தின் திசையெங்கும் சென்று
துதிபாடும் தமிழ்மண்ணின் தீரம்
துலங்கட்டும் புவியில் இந்நேரம்
எதிர்வாதம் இதிலில்லை யார்க்கும் - என்ற
எனதாவல் மெய்ப்பட வேண்டும்!



உப்புக்குளம் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். இயற்பெயர் முஹமட் ஷிஹார். மன்னூரான் எனும் பெயரில் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர் இவர் "ஒரு யுகத்தின் சோகம்" எனும் கவிதைத் தொகுதியை வெளியிட்டு உள்ளார். இசையில் அதீத ஆர்வம் உள்ளவர். சில மெல்லிசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார். ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றையும் தமிழில் மொழிபெயர்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. மொகமட் சுஜானா

# தெளிந்து செல்ல என்ன வேண்டும்

இதயங்களின்
இனிமையான தோரணையில்
வாலிபங்களின் வாசலில் நிற்கும்
வாழ்வின் வசந்தங்களின்
வரவேற்பு கீதங்களே

அறிவுக்கு தீனி என்றுதான்
அங்கம் அங்கமான வளர்ச்சி என்கிறார்கள்
அறிவியல் மேதைகளின் அறிவீனமான
செயல்கள் செத்துவிடாமல் செழிப்பாக வளர்க்கின்றது?

பட்டப்படிப்பு முடியும் முன் சிலர்
பட்டுப்போவதற்கு காரணம் தான் என்னவோ
மோகங்களின் முற்றுகையில்
ஏன்... ஏன்..
எம்மவர் மூழ்கிப் போகின்றனர்

தேடல்களின் வயதில்
சாதனை புரிய
வேண்டியவர்கள் ஏன்
வேதனையின் வேள்வியில் விழுந்து வீணாகப் போகின்றனர்.

கல்லூரியிலும் கலாசாலையிலும்
காலத்தை காதலென்ற
பெயரில் கருக்கட்டச் செய்கின்றனர்

சிலர்
சிதைந்துபோவது
வாழ்க்கையே என்று தெரியாமல்
புதைந்து கொண்டிருக்கின்றனர்

எம் சமூகம் தெளிந்து செல்ல
என்ன வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. மொகமட் சுஜானா

# பெண்ணே விழித்தெழு

உயிர்களின் வலு
ஒன்றாக இருக்க
உருவங்கள் தானே
மாற்றப்பட்டது
ஏனிதற்குள்
இத்தனை சூட்சுமங்கள்

அடிமைத்தனம் அடக்குமுறை என்ற
அணிவகுப்புக்குள் உள்ளாக்கப்பட்டது
உமது விதியா?
உமக்கு மானிடம் செய்த
மாற்று நடவடிக்கையா?

தாய்மை என்றசொல்
உனக்கிருந்தும்
தரங்கெட்டநிலையில்
தாரமாக்கப்படுவது ஏனோ?

மனைவி என்ற நிலையிருந்தும்
விதி வசத்தால் மாங்கலியம் பறித்து
விதவை என்ற வார்த்தைக்குள்
வடிவமைத்து வதைக்கப்படுவதேனோ

இருவர் காணும் இன்பத்தில் - நீ
மட்டும் அபாக்கியவதியாக்கபடுவது ஏனோ

விடைகாண முடியாத உலகிற்கு
விடுகதையாய் மாறியது ஏனோ
விடிவெள்ளி தோன்றுகிறது
உனக்கோ விடிவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையாக மடந்தையாக
அறிவையாக தெரிவையாக
காளையரின் கவிக்குள்
கருப்பொருளின் கருவாக சிதைந்து
புதைந்திருக்கின்றவர்கள்
உன்னை புண்படுத்தத்தானோ?

புரிந்து கொள்
விழித்தெழு
இலக்கியமும், இதிகாசமும்
உன்னைப் போற்றுவது போல்
தூற்றும் நயவஞ்சகர்களின்
நடிப்புக்குள் வீழ்ந்துவிடாமல்
வீறு நடைபோடு

இவர் செதுக்கப்படாத சிற்பங்கள் என்னும் கவிதைத் தொகுதியினை வெளியிட்டுள்ளார். கவிதை, கட்டுரை என்பவற்றை மிகவும் சிறப்பாக எழுதி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.ஆர்.மயூரன்

# மீண்டெழும் மறுஜென்மம்

உதட்டளவில் தெறித்த
வார்த்தை வம்புகள்
உள்மனதைத் தழுவாதவையென
தூது செல்லும் தென்றலே
அவளிடம் போய்ச் இதமாய்ச் சொல்
இதயம் பின்னிப்பிணைந்த
அன்புறவிற்குள் ஆயுள் தண்டனையை
அகராதி போலவே
தவணை முறையில் தரமே
என்றும் நினைவே என் நிழலோடு நில்
கடல் மேவிப்போகும் அலையின் துடுப்பென
அவள் மனம் மனத்திரையில் பதித்த
முத்துக்காதலே! என்
இதயக் கரையை கண்ணில்
வெப்பமாவதைக் கண்டுசெல்
கலைந்த நிமிடங்கள் கறைபடிந்து போகட்டும்
காற்றோடு காற்றாக கண்ணில் படாமல்
கரையட்டும் - கலையாத
அவள் இன்ப முகம் காண
வெற்றுக் காகிதமே கவிதையோடு கலந்துறவாடிக் கொள்
என் கனவுகளுக்குள்
அவல் நினைவினைப் பொருத்தி
அவள் இதயத்திற்குள் என் உயிரைப் புதைத்துக் கொள்ள
காதலர் கள் சாமியே கை கொடுத்து என்
காதலுக்கு உதவுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.ஆர்.மயூரன்

# முதுமைதனை போற்றிடவே

அனுபவ சுவட்டிற்குச்
சொந்தக்காரன்
ஆழ்ந்த பொறுமைக்கு
வைத்தியன்
அழியாத எண்ணங்களுக்கு
என்றும் மறையாத உயிர் தந்தவன்

உன்னோடும் என்னோடும்
இளமையின்பின்
முழுமையாய்க் கலப்பவன்
முழுவாழ்வின் தடயங்களுக்கு
விடைபெற்றுக் கொடுத்தவன்
நடைபோடும் காலங்களில்
வினாவைக்கேட்டு வளர்ந்தவன்

உலகம் கடந்து
உயர் ஞானம் பெற்று – நீ
வானம் எளிதில் இளமையாய் காண
தன் வயதினை தான் கொடுத்தவன்

அன்று
முக்கோண சிக்கல்களுக்கு
முகம் கொடுத்தவன் – இன்று
காலத்தோடு கலகம் கண்டு
கவலையோடு வாழ்கின்றவன்

அகில உலகும் முதுமைதனைப்
போற்றிடவே – நீ
முதுமைக்கு உயிமூச்சாய்
நின்று உழையடா

மாற்றியமைப்போம்
முதுமையின் நிலைமைகளை
போற்றியே மதிப்போம்
முதுமையின் அனுபவத்தை...

சாவற்கட்டு என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மன்னார் புனிதசவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்கிறார். கவிதை, மெட்டமைத்தல், பாடல் இயற்றல் என்பவற்றில் வல்லபவராக காணப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்வாசல் வழியே

பொட்டிழந்தேன் பூவிழந்தேன்
பொந்தாலி தனையிழந்தேன்
பட்டிழந்தேன் சிரிப்பிழந்தேன்
தொட்டணைக்கும் கையிழந்தேன்
வெட்டவெளிதனில் நிற்கும்
ஒற்றைமரம் போலே நான்
குட்டியினைச் சுமந்தபடி அந்தரித்துள்ளேன்

முண்டகட்டை என நான்
முன் நிற்க மறுத்தேன்
வேண்டாத பொருளாக
வெறுத்தொதுங்கிக் கொண்டேன்
கூண்டுக்குள் வாழும் குருவி போல
நீண்ட வேலி ஒன்றை
எனக்கமைத்து கொண்டேன்

இப்படி வாழ ஆசையா என்ன
ஆனால் இது எங்கள் கற்பு நீதி
அப்பாடி என்று விரல்வைப்பார் – நாம்
நிமிர்ந்திட நினைத்தால்
குறிவைப்பர்

ஆண் என்றால் இப்போ ஒதுங்கனும்
ஏன் என்றால் நான் விதவையன்றோ
கண்ணொன்று மூக்கொன்று ஆகிவிடும்
காதோடு பலசெய்தி சொல்லிவிடும்
யாருண்டு எங்களின் துன்பம் சொல்ல
எனைப்போல விதவைதான் புரிந்திடுவீர்

புன்னகை மலஉந்த முகமாய் – எமை
பெண்பாஉக்க வருபவர் அப்பப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வாசல் வழியாக அல்ல - எமை
புண்ணாக்கி நெஞ்சை - ஒரு
புழுவாக எண்ணி
பின்வாசல் வழியே வேட்டையாடி
பசிதீர்க்க பல நாய்கள் உண்டு

மாந்தர்களே வேண்டாம்
பட்டமரங்கள் அல்ல நாம்
பசுமையாக்க பட வேண்டியவர்கள்
கண்ணீர் துடைத்து கை கொடுக்காவிடினும்
எண்ணங்களையாவது உதயமாக்குங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்டினா ரமேஷ்

# நான் தாகமாய் இருக்கிறேன்
# தண்ணீர் கொடுத்தாயா

வெம்மையிலே கருகி
வேர்வையெல்லாம் சிந்தி
சீமையிலே குப்பையள்ளும்
யார்நம் இரங்கா மனிதர்கள்

அடுப்பெரிய எங்கள்
அவதியினை என்ன சொல்ல
சுடுகின்ற வெய்யிலிலும்
சுத்தமாக்கி நாமன்றோ

பறைகுலம் என்று
பரிகசிக்க ஆளுண்டு
குறைஎன்ன எமக்கு
அறவெறுத்து ஒதுக்கிவிட

ஊர்முழுதும் குப்பையள்ளி
உச்சிவெயில் தனைக்குடித்து
சீர்படுத்த வெளிக்கிட்டால்
உயிர் மூச்சு கூட அனல் வீசும்

வரண்டு போய் நா
நெஞ்சுவரை காய்ந்து போகும்
திறந்து வந்து தண்ணீர் தர
இஞ்சயா நக்கீரமுண்டு

வாசலிலே கூப்பிட்டு
வாய்க்கூற்ற தண்ணி கேட்டால்
பேசாமல் வீட்டுக்குள தாழிட்டுக் கொள்பவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவளையிலா தண்ணீர் கேட்டோம்
வெற்று போத்தல் தனும் இல்லையோ சொல்

"நான் தாகமாய் இருந்தேன்
தண்ணீர் கொடுத்தாயா"
நற்செய்தி வாசகத்தை
நாளெல்லாம் படித்தென்ன
நற்செயல்கள் புரிவதற்கு
நல்லமனம் இல்லையே காண்

மலம் கூட வீதியிலே
வலம் வந்து அலங்கரிக்கும்
மாதவிடாய் எச்சங்கூட
மலிந்து வந்து நிதஞ்சிரிக்கும்
மனிதர்களே! நாங்களும் மனிதர்களே

இரத்தம் சுண்டி கறுத்திட்டுது
இழிசாதி மட்டும் எச்சம்
வருத்தம் என்றாலும்
வசந்தகாலம் வரும் ஒருநாள்



தரங்கனி என்னும்
புனைபெயரில் பல
கவிதைகளை எழுதி
வருகின்றார். கவிதை, ஓவியம்,
நாடகம் என்பவற்றில் அதிக
அக்கறையோடு ஈடுபாடு காட்டி
வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.பெனில்

# நினைத்துப் பார்

அன்னையர் தினத்துக்கு
அடியோடு முடிவு கட்டு
இல்லை முதியோர் இல்லத்தை
இன்றே இடித்துத் தட்டு
முப்பாட்டன் காலத்தில்
இருந்ததா இந்நாள்
இல்லவே இல்லை
முதியோர் இல்லமும் கூட

இக்காலம் சொன்னது
அன்னையர் தின பிரகடனம்
இதனால் தான் என்னவோ
ஏகப்பட்ட முதியோர் இல்லம்
வேண்டாமடா இந்த
வேடிக்கையான ஒருநாள்
வேதனையாக இல்லையா
கண்கண்ட தெய்வத்தை
தெருவிலே விட்டுவிட்டு
ஊர்கூடி ஆலயத்தில்
திருவிழா எதற்கு...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.பெனில்

# நிலைக்காத என் கனவுகள்

என் கனவுகள் சில
சிறகடித்து பறக்கின்றது
மறுகணம் சிறகுடைந்து
மண்ணில் விழுகின்றது

சிலகனவுகள்
கண் சிமிட்டுகின்றது
மறுகணம் மறைந்தே
போகிறது

சில கனவுகள்
சிரிக்கின்றது
மறு நொடியில் அழுகிறது

சில கனவுகள்
பிரசவிக்கும் போதே
மரணித்துப் போகின்றது

நிலைக்காத என் கனவுகளால்
விடியாத இரவுக்குள்
என் வாழ்க்கை சரிதம்
சயனித்துக் கொண்டிருக்கின்றது.

மன்னாரில் உள்ள
எருகலப்பிட்டி என்னும்
இடத்தைச் சேர்ந்த இவர்
கவிதை, சிறுவர் நாடகம்
என்பவற்றை சிறப்பாக
எழுதி
வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ.இராஜேஸ்கண்ணன்
த.ஜெயசீலன்
தாட்சாயணி
பெரிய ஐங்கரன்
செ.கணேசன்
த.அஜந்தகுமார்
வெ.துஷ்யந்தன்
க.பரணீதரன்
வேல்.நந்தகுமார்
கமல சுதர்சன்

மன்னார் அமுதன்
பி.அமல்ராஜ்
மன்னூரான் ஷிஹார்
மன்னார் எம். ஷிபான்
ராமப்பிரியா கருணைராசா
அமல்ராஜ் ரெவல்
மொகமட் சுஜானா
ஜே.ஆர் மயூரன்
ஹில்லறி பஸ்ரினா
பிரான்சிஸ் பெனில்

கெகிறாவ சஹானா
கெகிறாவ சுலைஹா
நாச்சியாதீவு பர்வீன்
ஜன்சி கபூர்
மிப்ராஸ் இஸ்மாயில்
ரிஸ்னா ரசீன்
நிசாம் பாரூக்
வசீம் அக்ரம்
சஹ்ரின் அஹ்மத்
நேகம பஸான்

ISBN 955524963-6
9789555249638
அச்சமைப்பு : மதி கலர்ஸ் நல்லூர்.
0212229285